விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii


சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 01 சனிக்கிழமை (17.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

- யுத்தத்தில் அதிகளவான மக்கள் இறந்தனர்
- மனிதக் கேடயமாக மக்கள் இருந்தனர்
- காணாமல் போனோர் குறித்து விசாரணை
- அதிகளவான தாக்குதல்கள்
- அதிகாரப் பகிர்வு அவசியம்
- சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு தேவையற்றது

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை

# நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு!



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது அதிகாரத்தை துஷ்பிரயோகப் படுத்தி சட்டத்தை மீறிய சம்பவங்கள் இடம்பெற்றமைக்கு சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் அவை குறித்த விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கடந்த மாதம் கையளிக்கப்பட்டிருந்த உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனிலிருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர் மீது தீவிர விசாரணை

(கொழும்பு)

லண்டன் ஸ்ரான்ஸ்ரெட் விமான நிலையத்தில் இருந்து நாடுகடத்தப்பட்ட 55 இலங்கையர்கள் மீது கட்டுநாயக்க விமான நிலைய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவர்களில் 48 ஆண்களும் 7 பெண்களும் அடங்குகின்றனர். அவர்கள் பதுளை, யாழ்ப்பாணம், கண்டி, வவுனியா, திருகோணமலை, வத்தளைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அறியப்படுகிறது. இவர்கள் மீது புலனாய்வுப் பிரிவினர் விசாரணை (20ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட அறிக்கைகள் மாயம்!



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்ட போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அக்கட்சியின் ஏனைய சில உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட பிரதிகள் காணாமல் போயின.

சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட பிரதிகளை ஐக்கிய தேசியக் கட்சியில் உயர் பதவியொன்றை வகிக்கும் (20ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய கீதத்தை தமிழிலும் பாடலாம்

(கொழும்பு)

தேசிய கீதத்தை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பாட அனுமதிக்கப்பட வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

இவ் ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவ் அறிக்கையில் தேசிய கீதம் குறித்து மேற்கண்டவாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (எ-1)

## இராணுவத்தைக் காப்பாற்றவே ஆணைக்குழு அறிக்கை வெளியீடு

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினைக் காப்பாற்ற வேண்டும். ஆகவே இராணுவத்தினைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையினை என்ன என்ன ஆணைக்குழுவினூடாக அரசாங்கம் செய்யலாம் என்ற போக்கில் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

இதன் அடிப்படைகளைப் பார்க்கும் போது இராணுவம் இதனை செய்திருப்பார்கள். ஆனால் சில விடயங்களில் சில இராணுவத்தினர் செய்திருப்பதால் ஒட்டுமொத்த இராணுவத்திற்கும் கெட்டபெயர் உருவாகக் கூடும்.

ஆகவே அப்படியான இராணுவத்தினர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற பாணியிலும் அறிக்கை அமைகின்றது. ஓர் இடத்தில் நான் பார்த்தபோது சர்வதேச தரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடைக்கு எதிரான வழக்கு அடுத்த மாதம் சென்னையில்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கவேண்டும் என கோரும் மனு மீதான விசாரணை அடுத்த மாதம் இடம்பெறும் என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இவ் வழக்கு மீதான விசாரணைகளை துரிதமாக நடத்தவேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்த கோரிக்கை தொடர்பிலேயே நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு இந்திய அரசு விடுத்த தடையை நீக்கக் கோரி 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை உயர் நீதிமன்றத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோருகிறது ஆணைக்குழு

(கொழும்பு)

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொது மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மக்களிடமும் மன்னிப்பு கோருகின்றோம்.


சகல தரப்புக்களையும் சார்ந்த தலைவர்கள் முரண்பாடுகளைக் களைந்து யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும்.

அரசியல் தலைமைகளின் பலவீனமே முரண்பாடுகளுக்கு காரணம். நல்லிணக்க முனைப்புக்களில் மதத் தலைவர்களும் சிவில் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தலைமை பதவிக்கு தேர்தல் தவிர்க்க முடியாதது - சஜித்

(கொழும்பு)



கட்சியின் தலைமைப் பதவிக்காக தேர்தல் நடத்துவது தவிர்க்க முடியாதது எனவும் கரு ஜய சூரிய தலைவராக செயற்படுவார் என்பதில் தனக்கு நம்பிக்கை உண்டு என்று ஐ.தே.கவின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கூறினார்.

தேர்தல் நடைபெறுவதை விக்கிரமசிங்க தடுக்கும் சாத்தியம் பற்றிக் கேட்டபோது, அது கட்சியின் யாப்பை மீறுவதாக அமையும் என்பதால் அப்படி நடக்காது என அவர் கூறினார்.

தலைமைப் பதவிக்கான வேட்புமனுக்கள் 18 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட வேண்டும். தலைமைப் பதவி பற்றிய தீர்மானம் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படுமென சஜித் பிரேமதாச கூறினார். (எ-5)

# இந்திய அரசின் உதவியில் அமைக்கப்பட்ட 800 வீடுகள் மார்ச்சிற்கு முன் கையளிப்பு

## தூதரக அதிகாரிகள் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் 800 வீடுகள் மார்ச் மாதத்திற்கு முன் பயனாளர்களிடம் கையளிக்கப்படுமென இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் வருகைதந்த இலங்கைக்கான இந்திய பிரதி தூதுவர் குமரன் தலைமையிலான தூதரக அதிகாரிகள் குழு ஆயர் இல்லத்தில் நேற்று முன்தினம் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினரைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போதே இந்திய தூதரக அதிகாரிகள் மேற்கண்டவாறு உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அவர்களால் தெரிவிக்கப்பட்டதாவது,

வடக்கு மாகாணத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கு இந்திய அரசு பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

இதில் இந்திய அரசினால் முன்னெடுக்கப்படும் 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் பலவாறு பேசப்படுகின்றது.

உண்மையில் சில நடைமுறைகளினால் வீட்டுத்திட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டது.

எனினும் தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன் 800 வீடுகள் பயனாளர்களிடம் கையளிக்கப்படும்.

அத்துடன் ஓமந்தை-பளை, பளை-காங்கேசன்துறை மற்றும் மதவாச்சி-மன்னார் வன்ரயான புகையிரத பாதை அமைக்கும் பணிகள் விரைவில் நடைபெறும்.

மேலும் காங்கேசன்துறை துறைமுகப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படும்.

இதனைவிட வைத்தியசாலைகளுக்கு நவீன உபகரணங்கள் இந்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் உரிய தரப்புகளுடன் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றோம் என இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (பர)

## நுகர்வோர் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

எதிர்வரும் பண்டிகை காலத்தில் நுகர்வோர் சட்டத்தை மீறும் வர்த்தக நிலையங்களை கண்டு பிடிப்பதற்காக விசேட சுற்றிவளைப்பு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவிலுள்ள அதிகாரிகள் நாடளாவிய ரீதியில் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று சுற்றி வளைப்புகளை மேற்கொள்வார்கள் என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் றூமி மர்ஷூக் தெரிவித்துள்ளார்.

பொருட்களை பதுக்கி வைத்திருப்பவர்கள், மோசடி செய்பவர்கள், நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்பவர்கள் உள்ளிட்ட நுகர்வோர் சட்டத்தை மீறும் அனைத்து வர்த்தகர்களுக்கும் எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருடம் நவம்பர் மாதம் வரை நுகர்வோர் சேவைகள் அதிகார சபை நாடளாவிய ரீதியில் 35 ஆயிரம் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளன. இதன்மூலம் 100 கோடி ரூபாயிற்கும் மேற்பட்ட அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# யப்பான் அரசின் உதவியினூடாக சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

## இலங்கைக்கான தூதுவர் நம்பிக்கை

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவிகள் அடிமட்ட மக்களை நேரடியாக சென்றடைகின்றன என தான் நம்புவதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹெபோ நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்த உதவிகளின் ஊடாக நிலையான அபிவிருத்தி மற்றும் சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்த முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் ஒரு கட்டமாகவே உள்நாட்டில் இடம்பெயர்ந்த வட மாகாண மக்களை மீளக் குடியேற்றுவதற்காக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டிற்காக ஜப்பானிய அரசு 86 மில்லியன் ரூபா நிதியுதவி அளிப்பதாக ஜப்பானிய தூதுவர் தெரிவித்தார்.

இச் செயற்திட்டம் ஹாலோ ட்ரஸ்ட் எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் ஊடாக அமுல்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பிலான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹெபோ மற்றும் ஹாலோ ட்ரஸ்ட் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அடம் ஜாசிங்சி ஆகியோர் நேற்று கைச்சாத்திட்டனர்.

இதேவேளை உள்நாட்டில் இடம்பெயர்ந்த வட மாகாண மக்களை மீளக்குடியேற்றுவதற்காக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டிற்கு ஜப்பானிய அரசாங்கம் இதுவரை 250 மில்லியன் ரூபாயினை பல அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## உர மானியம் நிறுத்தம்

(புங்குடுதீவு)

வேலணை புங்குடுதீவு கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான மானிய உர விநியோகம் இம்மாதம் 24 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே உரமானியத்தை பெறாத நெற் செய்கையாளர்கள் உடனடியாக அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு வேலணை, புங்குடுதீவு பெரும்பாக உத்தியோகஸ்தர் தெரிவித்தார். (எ)

## பொலிஸார் இருவர் கைதாகினர்

(கொழும்பு)

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்திற்கு கையெழுத்திடச் சென்ற நபர் ஒருவர் மரணடைந்தமை தொடர்பாக அப் பணியகத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இருவர், கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்னர்.

மாளிகாவத்தையை சேந்த 30 வயதான மொஹமட் சதாக் மொஹமட் பாஹிம் எனும் நபர் கடந்த 30ஆம் திகதி பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்திற்கு கையெழுத்திடச் சென்றபின் மரணமடைந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கில் கோட்டை பதில் நீதவான் தீமனி பெத்தேவெல முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மேற்படி பணியகத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரையும் கான்ஸ்டபிள் ஒருவரையும் தாம் கைது செய்துள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (எ-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(6977)

இந்துசமய கலாசார அமைச்சினால் கொழும்பு ஜோன் டி சில்வா கலையரங்கில் 17.12.2011 இல் நடைபெறும் கலாசார விருது வழங்கும் வைபவத்தில் கலாபூசணம் விருது பெறும் ஓய்வுபெற்ற ஆசிரியரும் கவிஞருமான

**புத்தூர் வே. இளையகுட்டி**

அவர்கள் மேன்மேலும் பல விருதுகள் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

'சுகிர்தம்'
மணல் பகுதி, புத்தூர்.

வாழ்த்துபவர்கள்
வ.திருஞானசம்பந்தர் குடும்பம்
ஆ.செகசோதி குடும்பம் (ஜேர்மனி)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14 | 18 |
| 06 | 11 |
| 1955 | 2011 |

**அமரர் சபாபதி - தனபாலசிங்கம்**

(பிரபல இணுவில் பத்திரிகை முகவர்)

அன்புடன் அனைவரையும் அரவணைத்து
பாசத்துடனும் பண்புடனும் வாழ்ந்த
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
ஆல விருட்சமாய் ஆயிரம் வருடங்கள்
வாழ்வீர்கள் என காத்திருந்தோம்-இன்று
காலன் கணக்கு இதுவென அறியாது தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கடந்த 18.11.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று 17.12.2011 சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல.61, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

(சி-5208)



## நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

நல்லூர் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 19.12.2011 ஆம் திகதியிலிருந்து 26.12.2011 ஆம் திகதி வரை பார்வையிடலாம்.

- தலைமை அலுவலகம்- கருவப்புலம் லேன், கொக்குவில்.
- நல்லூர் உப அலுவலகம்-ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- கொக்குவில் உப அலுவலகம்-பிறவுண் வீதி, கொக்குவில்.
- பொது நூலகம் கோண்டாவில்-ஸ்ரீ வல்லிபுரநாதர் கோவில் வீதி, கோண்டாவில் கிழக்கு.
- பொது நூலகம் கொக்குவில்- பிறவுண் வீதி, கொக்குவில்
- பொது நூலகம் நல்லூர்- கலாசாலை வீதி, திருநெல்வேலி.

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி-5207)

# இன்று ஒரு தகவல்

## அன்புள்ள அம்மா

ஜப்பான் நாட்டில் இருந்து ஒருவர் இலங்கைக்கு வந்தார். அவர் இலங்கையர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தார்.

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்" என்று விசாரித்தார்.

''ஒரேயொரு பெண் குழந்தைதான்'' என்று இவர் சொன்னார்.

"வயது என்ன?" என்று கேட்டார். மூன்று வயது என்று சொன்னார்.

''குழந்தையைப் பார்க்க வேண்டும்'' என்று கேட்டார். "பாடசாலைக்கு போய் இருக்கிறார்" என்று சொன்னார். அந்த ஜப்பானியர் திகைத்துப் போய் நின்றார்.

"என்ன... மூன்று வயதில் பாடசாலை போகிறாரா என்று அதிசயப்பட்டு கேட்டார்?"

"ஆமாம்... அவர் முன்பள்ளியில் படிக்கிறார். அதுசரி... உங்கள் ஊரிலே இந்த வயதில் பாடசாலை அனுப்பமாட்டீர்களா?" என்று கேட்டார்.

'' எங்கள் ஊரில் ஏழு அல்லது எட்டு வயதில்தான் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவோம்'' என்றார். இப்போது இவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. சிறிய குழந்தைகளின் மனம் பக்குவம் அடைந்த பின்னர்தான் பாடசாலைக்கு அனுப்புவோம். அந்த வயதில் அவர்களுக்கே பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும்.

ஏழு வயது வரைக்கும் அந்தப்பிஞ்சு உள்ள அன்பையும் நட்பையும் பிறரின் அறிமுகங்களையும்தான் அதிகமாக எதிர்பார்க்கும்.

ஒரு குழந்தை எவ்வளவு நேரம் தனது தாயுடன் இருக்கிறது. அதேமாதிரி எவ்வளவு நேரத்தை அக்கம் பக்கம் வீட்டாருடன் செலவழிக்கிறது. இவற்றையெல்லாம் பொறுத்துத்தான் அந்தக் குழந்தையின் உள்ளம் விசாலமடைகிறது. அறிவிலே அந்த வயதுக்கு ஏற்ற முதிர்ச்சி ஏற்படுகிறது.

வீட்டிலே இருக்கக்கூடிய குழந்தை அந்த வயதினுள்ளே தன் வீட்டைப் புரிந்து கொள்கிறது. வீட்டில் உள்ளவர்களை புரிந்து கொள்ளும் தன்மையை ஏற்படுத்திக் கொள்கிறது.

இதுமாதிரியான சூழ்நிலை பாடசாலையிலே கிடைக்காது. அங்கே எல்லோரும் ஒரேமாதிரித்தான் நடத்தப்படுகிறார்கள். ஒரு குழந்தைக்கு என்று தனியாக கவனம் செலுத்த மாட்டார்கள்.

ஒரு குழந்தை வெளியிலே செல்லும்போது பல பேரையும் பார்க்க வேண்டும் பழக வேண்டும் என்ற ஆசையை ஏற்படுத்திக் கொள்கிறது.

அதன் மனம் விசாலமடைகிறது.

இவையெல்லாம் அந்தக் குழந்தையின் ஏழு வயதினுள் ஏற்படுகிற சமாச்சாரங்கள். இப்படியாக இந்தக் குழந்தை பக்குவம் அடைந்த பின்னர் பாடசாலைக்கு சேர்ப்பதுதான் முறை... அதை விட்டுவிட்டு ஒரு குழந்தை என்ன ஏது என்று தெரிந்து கொள்வதற்கு முன்பே பாடசாலைக்கு அனுப்பி இந்தக் குழந்தை மனதிற்கு ஒவ்வாத சமாச்சாரங்களையெல்லாம் அதனது மூளைக்குள்ளே திணித்து... மென்மையான அதன் உணர்வுகளைச் சிதைக்கக்கூடாது.

இவ்வளவும் அந்த ஜப்பான்காரர் சொன்ன கருத்து. இலங்கையைப் பொறுத்தவரையில் இது எந்த அளவுக்கு சரியாகப் பொருந்தும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இது நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டிய கருத்தாகவுள்ளது.

குழந்தை உளவியல் நிபுணர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா?

குழந்தைகளுக்கு இளம் வயதிலே அன்பும் அரவணைப்பும் மிகவும் அவசியம். அதைப் பொறுத்துத்தான் அவர்களின் எதிர்காலம் அமையும்.

ஒரு குழந்தை நல்லபடியாக வளர வேண்டுமென்றால், நல்ல ஆகாரம் மட்டும் கொடுத்தால் மட்டும் போதாது. அன்பான அரவணைப்பும் மிகவும் அவசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புகையிரத நிலைய கட்டடங்களில் தங்கியிருப்போர் ஜனவரி மாதத்திற்கு முன்னர் வெளியேற வேண்டும்

## புகையிரத திணைக்களத்தின் வடபிராந்திய பொறியியலாளர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள புகையிரத நடைபாதைகள் மற்றும் புகையிரத நிலைய கட்டடங்களில் தங்கியிருக்கும் மக்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு முன்னதாக அவற்றை கைவிட்டு வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்று புகையிரத திணைக்களத்தின் வடபிராந்திய பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையும் புகையிரதப் பாதை அமைக்கும் ஆரம்பக்கட்ட பணிகள் எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு முன் ஏற்பாடாக புகையிரதப் பாதைகளை அமைத்து சீர்செய்யும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரைக்குமான புகையிரதப் பாதையை நேரான பாதையாக அமைப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருந்த பாதை வளைந்த பாதையாகும். இப்போது பாதைகள், மதகுகள் போன்றவற்றை தவிர்த்து புகையிரதப்பாதை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட யாழ். புகையிரத நிலையம் மற்றும் காங்கேசன்துறை புகையிரத நிலையம் என்பனவும் மிகவும் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன. இதேசமயம் யாழ். புகை யிரத நிலைய கட்டடத்தில் தங்கியிருப்போரும் ஜனவரிக்கு முன்னர் குறித்த இடத்திலிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# அண்ண உதட்டுபிளவு இலவச சத்திரசிகிச்சைக்கான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்வைத்தியபீடமும் ஸ்மைல் ரெயின் தொண்டு நிறுவனமும் இணைந்து அண்ண உதட்டுபிளவு சத்திரசிகிச்சையினை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது.

இச்சிகிச்சை தேவைப்படும் வசதி குறைந்த, ஆதரவற்ற குழந்தைகள் தொடர்பிலான பெயர், வயது, விலாசம், தொலைபேசி இலக்கம் என்பனவற்றை அனுப்பி சிகிச்சைக்கான, பிரயாண, தங்குமிட வசதிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இக்குறைபாடு சிகிச்சையளிக்க முடியாத ஒன்று அல்ல என்றும் இச் சிகிச்சையின் மூலம் இதனை சீர்செய்ய முடியும் என்றும் சிகிச்சைப்பிரிவு கூறியுள்ளது.

இச்சிகிச்சைக்கு செல்ல விரும்புவர்கள் சங்கானை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கோகுலனுடன் தொடர்பினை ஏற்படுத்தி சிகிச்சையினை இலவசமாக மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 75 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 |
| தக்காளி | 140 | 160 | 130 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 80 | 100 | 70 |
| கரட் | 70 | 120 | 60 |
| பூசணி | 60 | 70 | 55 |
| புடோல் | 50 | 100 | 60 |
| வாழைக்காய் | 45 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 70 |
| பாகற்காய் | 85 | 180 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 110 | 140 | 150 |
| லீக்ஸ் | 50 | 100 | 60 |
| பீற்றூட் | -- | 70 | -- |
| கறிமிளகாய் | 140 | 180 | 130 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 160 | 190 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை – 1 பிடி | 15 | 40 | 20 |
| தேசிக்காய் | 110 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 30 |

# இராசி பலன்

*17.12.2011*

*(மார்கழி 01, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு*

*சப்தமி பிற்பகல் 4.59 மணிவரை*

*பூரம் முன்னிரவு 7.58 மணிவரை*

*இராகுகாலம் 9.22-10.52 மணிவரை*

*சுபநேரம் 3.22-4.52 மணிவரை*

**மேடம்** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவீர்கள், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், இல்லத்தில் இனிய செய்திகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், தாய் வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வாகன சுகமுண்டு.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், சுவாரஸ்யமான நாள்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், உத்தியோகத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட் சேர்க்கை உண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்கள் அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும், வெளியூர் போக்குவரத்துக்களால் அலைச்சல்கள் கூடும், சயன சுகக்குறைவான நாள், தொழிலில் பணியாளர்களை மாற்றும் சிந்தனை உருவாகும்.

**துலாம்** பணப்புழக்கள் அதிகரிக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், மதிப்பும் மரியாதையும் உயரும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும்.

**மகரம்** விட்டுக் கொடுத்து நடக்க வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தின் தேவைகளை நிறைவு செய்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், தொழில் மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், காணாமற்போன பொருளொன்று கைக்கு கிடைக்கும், உடல்நலப் பாதிப்புக்கள் அகலும்.

வளவன்

## பரிசளிப்பு விழா

மாலைநேர கற்கை மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுழிபுரம் பெரிய புலோஅண்ணா சனசமூக நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வானது இங்கு கல்வி கற்கும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையிலான 145 மாணவர்களுக்கு நடத்தப்படுகின்றது.

இந்நிகழ்வில் பல்வேறு போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு மதிப்பளித்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரநேசன் மற்றும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் பிரதேசசபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கிராமசேவகர், சங்கானை பிரதேச செயலக பிரதிநிதிகள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

## பொதுக்கூட்டம்

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பான திட்டமிடல்களும் இடம்பெறவுள்ளதால் பழையமாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

## பகவதபடல வாசிப்பு

யாழ்ப்பாணம் சத்திய சாயிசேவா நிலையத்தின் பகவத படல வாசிப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் 11 மணி வரை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்பகவத படல நிறைவு நாளன்று நாராயண சேவை இடம்பெறவுள்ளது எனவும் சத்திய சாயிசேவா நிலையம் அறிவித்துள்ளது. (அ)

## திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்ற நாட்டு மக்களின் நன்மைக்காக நடத்திவரும் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை எட்டாம் திருமுறை நிறைவு முற்றோதப்படவுள்ளது.

இதன் நிறைவில் நாயன்மார் நால்வரும் அழகிய முத்துப் பல்லக்கில் காலை 8 மணிக்கு நீர்வேலி ஸ்ரீகந்தசாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளுவர்.

அதனைத் தொடர்ந்து ஒன்பதாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தினமும் காலைப் பூசையினை அடுத்து முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (அ)

# அதிபர்களுக்கான விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. இங்கு யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்-I சி, யா/எழுவைதீவு முருகவேள் வித்தி வகை-II, யா/நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம் வகை III, யா/நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம் வகை III ஆகிய பாடசாலைகள் உள்ளடங்குகின்றன.

இவ்வெற்றிடங்களுக்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர் தரத்தினை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் (வகுப்பு-I, வகுப்பு-2-I) விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை தீவக கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (அ)

* * * * * *

யாழ். கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள வகை 2 ஐச் சேர்ந்த யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை அதிபர் பதவிக்கு யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட மாகாணப் பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் நிர்வாகக் கிளையில் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து டிசெம்பர் 26 ஆம் திகதிக்கு முன்னராக ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (அ)

# உள்ளூராட்சி அமைச்சினால் நவீன பேருந்து தரிப்பிடங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி அமைச்சினால் மாகாண அபிவிருத்தி விசேட நிதி மூலம் வடக்கு மாகாணத்தில் நவீன பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் நவீன முறையிலான பேருந்து தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டது.

இவ்வருடம் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள பேருந்து தரிப்பிடத்தில் 40 இலட்சம் ரூபா செலவில் 66 அடி நீளமும் 22 அடி அகலமும் கொண்ட நவீன முறையிலான பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளது.

இப்பேருந்து நிலையமானது மூன்று மாடிகளைக் கொண்டதாக அமையவுள்ளது. கீழ்த்தளம் பேருந்து தரிப்பிடமாகவும் 2ஆம் மாடி நவீன வசதிகளுடன் கூடிய கடைத் தொகுதியும் 3 ஆம் மாடியில் கலாசார மண்டபமும் அமையவுள்ளது.

தற்போது மழைகாலம் ஆகையால் பஸ் நிலையத்தில் வேலைகளின் போது பயணிகளின் நலன்கருதி சங்கானை மரக்கறி சந்தைக்கு அருகில் தற்காலிகமாக பேருந்து தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விசேட பற்சுகாதார மருத்துவம்

(சாவகச்சேரி)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பற்சுகாதார கிளினிக் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கர்ப்பிணி தாய்மார் கிளினிக்குகளில் வைத்தியஅதிகாரி மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களின் சிபாரிசு கடிதங்களுடன் பிரதி புதன்கிழமைதோறும் நடைபெறும் பல்வைத்திய சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

கர்ப்பிணிகளுக்கான தனியான பற்சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பதற்கு யாழ். பிராந்திய பற்சுகாதார பணிப்பாளர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

நாவலடி ஓராங்கட்டை வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் பயணம் செய்ய முடியாதுள்ளது. இவ்வீதியானது பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் 751 இலக்க பேருந்துகள் செல்லும் பிரதான வீதியாகும்.

தினமும் இவ்வீதியால் பாடசாலை மாணவர்களும் ஆயிரக்கணக்கான மக்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் பயணம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## கலந்துரையாடல்

யாழ்.மாநகர சபையினரால் நடத்தப்படும் ஜே/75 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். மாநகர சுற்றாடல் அதிகாரி ரி.என். சூரியராஜா அறிவித்துள்ளார். (அ)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

வலிகாமம் கல்வி வலயத்தில் ஆயிரம் இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அடுத்ததாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதல் முதற்கட்டமாக 7 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளின் அதிபர்களையும் வலையமைப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட ஊட்டல் பாடசாலை அதிபர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்திற்கு வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## யாழ். செய்திகள்

## விசேட நவக்கிரக ஹோமம்

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு விசேட நவக்கிரக ஹோமம் ஒன்றை நடத்தவுள்ளது. இந்நவக்கிரக ஹோமமானது எதிர்வரும் 20 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதன் போது நவக்கிரக தேவர்களுக்கு விசேட ஹோமம், அபிஷேகம், பூஜை சனீஸ்வர பகவானுக்கு சகஸ்ர நாம (ஆயிரத்து எட்டு) அர்ச்சனை என்பனவும் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் பெயர், நட்சத்திரங்களை அலுவலகத்தில் பதியுமாறு ஆதீன மகா சபை அறிவித்துள்ளது. (அ)

## மாணவர்களுக்கான பதிவுகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2011/2012 ஆம் கல்வியாண்டின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவுகள் இடம்பெறவுள்ளன.

புதிய மாணவர்களுக்கான பதிவுகள் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்களுக்கான மீள்பதிவுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் இடம்பெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)





வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வடமாகாணசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.கலால்டீன், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் எஸ். சிவநாதன் மற்றும் வடமாகாண அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மற்றும் வடமாகாண கால்நடை வைத்தியர்கள் மற்றும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)





(யா/ இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரத்தின் மணிவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது மணிவிழா நாயகி ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதனையும் கல்லூரி ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

# செயற்கைக்கால் பொருத்துதல்

(வட்டக்கச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் செயற்கைக்கால் பொருத்துதல் மற்றும் பதிவு செய்தோருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல் ஆகிய செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினத்தில் மேற்படி செயற்பாடுகளுக்கு பதிவு செய்யாதோர் பதிவுகளை மேற்கொள்ளலாம். (அ-3-86)

# புதிய போதைப் பொருளை அதிகாரிகள் கைப்பற்றினர்

(கொழும்பு)

ஹெரோயின், ஹஷீஸ், கொகேய்ன் ஆகியவற்றுடன் மெத்தபித்தமைன் எனும் புதிய வகைப் போதைப் பொருளொன்று கடந்த வருடம் முதல் தடவையாக இலங்கைக்கு கடத்தி வரப்பட்டதாக நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் 26 கிலோ மெத்தபித்தமைன் போதைப் பொருள் இலங்கை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்விபரங்களை சபையில் தெரிவித்தார்.

கடந்த 10 வருடகாலத்தில் 287 கிலோகிராம் ஹெரோயின், 6.252 கிலோகிராம் ஹஷீஸ் மற்றும் 16 கிலோகிராம் கொகேய்ன் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 116.5 கிலோகிராம் ஹெரோயினும் இவ்வருடம் நவம்பர் மாதம் வரை 4.8 கிலோகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பல இடையூறுகளுக்கு மத்தியிலும் இம்முற்றுகைகளை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நன்றி தெரிவித்தார்.

மெத்தபித்தமைன் எனும் போதைப் பொருள் இலங்கைக்கு எவ்வறு கடத்திவரப்பட்டது என தயாசிறி ஜயசேகர எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இது இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு அம்சமா என அவர் கேள்வி எழுப்பினார்.

இக்கேள்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளிக்கையில், இது 1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு விளைவு எனக் கூறினார்.

அப்போது மேற்படி ஆட்சி 1994 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்துவிட்டது எனவும் இதனால் அத்தவறை திருத்திக்கொள்வதற்கு ஏராளமான கால அவகாசம் இருந்தது எனவும் தயாசிறி ஜயசேகர கூறினார். (அ-2)

# வைத்தியர்களை கடத்தி கப்பம் கோரியோர் கைது

நாட்டின் பல பாகங்களிலும் இயங்கி வந்த கருக்கலைப்பு நிலையங்களுக்குள் நுழைந்து வைத்தியர்கள் பலரை கடத்திச் சென்று அவர்களை தடுத்து வைத்து சுமார் ஒரு கோடி ரூபாய் பணத்தினை கப்பமாக பெற்ற பெண் உட்பட 7 பேர் அடங்கிய கடத்தல் குழுவொன்றை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி, வத்தளை, நிட்டம்புவ, கேகாலை, மாவனெல்ல, சிலாபம், ஜா- எல மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வைத்தியர்களையே குறித்து கும்பல் கடத்திச் சென்று கப்பம் பெற்றுள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஒரு பெண்ணும் ஆறு ஆண்களும் அடங்கிய கும்பல் ஒன்று இந்தச் சட்டவிரோத செயலினை மிகவும் சூட்சுமமாக மேற்கொண்டு வந்துள்ளது.

இக்குழுவினால் கடத்தப்பட்ட சகல வைத்தியர்களும் சட்டவிரோதமான முறையில் கருக்கலைப்பு நிலையங்களை நடத்தி வந்தமையினால் கடத்தல் மற்றும் கப்பம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை.

கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் வசித்து வந்த வைத்தியர் ஒருவருடைய வீட்டுக்குள் நுழைந்த இந்தக் குழுவானது தாம் பொலிஸார் எனக் கூறி குறித்த வீட்டை சோதனையிட்டுள்ளனர். குறித்த வைத்தியர் குருணாகல் பிரதேசத்தில் கருக்கலைப்பு நிலையத்தை நடத்தி வந்தவர். இது தொடர்பிலான தகவல்களை கேட்டறிந்த இக்குழுவினர் அவ்வைத்தியரை கடத்திச் சென்றுள்ளனர்.

அதன் பின்னர் அவ் வைத்தியரை விடுவிக்க வேண்டுமானால் தமக்கு 25 இலட்சம் ரூபாய் பணம் வேண்டுமென வைத்தியரின் வீட்டாரை அச்சுறுத்தியுள்ளனர்.

இக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க பணத்தினை வீட்டார் வழங்கிய பின் கடத்தல்காரர்கள் வைத்தியரை விடுவித்துள்ளனர்.

அதன் பின்னர் இந்தக் கடத்தல் தொடர்பாக வைத்தியரின் உறவினர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கப்பப் பணத்தினைப் பெற்றுக் கொண்ட கடத்தல்காரர்கள் குறித்த வைத்தியரை வரக்காபொல பிரதேசத்தில் விட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இக் கடத்தல் குழுவானது பொலிஸ் சீருடை அணிந்து கருக்கலைப்பு நிலையங்களுக்குள் நுழைந்து இவ்வாறு கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இக்குழுவை கைதுசெய்துள்ள பொலிஸார் குறித்த கடத்தல் சம்பவங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சொகுசு வாகனங்கள் சிலவற்றை மீட்டுள்ளதுடன் இச்சந்தேக நபர்களை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்து வருகின்றனர். (அ-2)

# படைவீரர்களின் ஓய்வூதியத்தில் பி.இ.மு., பி.இ.பி. என பாரபட்சம்

படைவீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் போது பிரபாகரன் இறப்புக்கு முன்னர், பிரபாகரன் இறப்புக்கு பின்னர் என்று பாரபட்சம் காணப்படுகின்றது. இதனால் படையினர் மத்தியில் பெரும் குழப்ப நிலையே காணப்படுகின்றது என்று ஐ.தே.கவின் எம்.பியான புத்திக்க பத்திரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்களின் அர்ப்பணிப்பு, வழங்கப்படும் ஓய்வூதியம் தொடர்பில் பிரதமரிடம் கேள்விகளை கேட்டிருந்தார்.

கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஓய்வூதியம் வழங்கப்படும் போது சகலருக்கும் சமமான பொதுவான நடைமுறையே பின்பற்றப்படுகின்றது. அதில் பிரச்சினை இல்லை என்றார்.

இடைமறித்த புத்திக்க பத்திரண எம்.பி. இல்லை, இல்லை, படை வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்போது பி.இ.மு., பி.இ.பி. என்ற பாராபட்சம் காண்பிக்கப்படுகின்றது. அதாவது பிரபாகரன் பி.இ.மு., பி.இ.பி. என்று பார்க்கப்படுகின்றது. இது தவறானது.

இதனால் படையினர் மத்தியில் குழப்பகரமான நிலைமையே ஏற்பட்டுள்ளது. இவற்றை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (அ-2)

# பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்திய பத்துப் பேருக்கு தற்காலிக பிணை

## நீர்கொழும்பு நீதவான் உத்தரவு

நீர்கொழும்பு நகர மத்தியில் வர்த்தக பகுதியில் பாதசாரிகளுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் தற்காலிகமாக நடைபாதை கடைகளை அமைத்து வியாபாரம் செய்து வந்த வியாபாரிகள் பத்துப் பேரை நீர் கொழும்பு பிரதான நீதவான் ஆயிரத்து 500 ரூபா ரொக்கம் பிணையிலும் தலா இரண்டு இலட்சம் ரூபா கொண்ட நீர்கொழும்புப் பிரதே சத்தில் வசிக்கும் நபர்களை சரீர பிணையிலும் விடுதலை செய்ய அண்மையில் உத்தரவு விட்டார்.

அத்துடன் அந்த வர்த்தகர்கள் நடத்தி வந்த தற்காலிய கடைகளையும் உடனடியாக அகற்றுமாறு நீதிபதி ஏ.எம்.என்.பி. அமரசிங்க பணித்தார்.

நீர்கொழும்பு மணிக்கூட்டு கோபுரம் அருகிலிருந்து தில்லாதூவ பகுதிவரையான வீதியோரத்தில் பண்டிகைக்கால வியாபாரம் நடத்துவதற்காக நீர்கொழும்பு மாநகரசபையினால் தற்காலிகமாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நடைபாதை கடைகளின் வியாபாரிகள் சிலரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவர்களாவர். இவர்கள் காலி, மாத்தறை, பொலநறுவை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வியாபாரிகளாவர். நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் சுற்றாடல் பிரிவினர் குறித்த வர்த்தகர்களை கைது செய்து மன்றில் ஆஜர் செய்தனர்.

பாதசாரிககள் பயணிப்பதற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் அப்பகுதியில் உள்ள (தெரு மருங்கை) தங்காலிக கடைகளை அமைத்து வியாபாரம் செய்த குற்றாச்சாட்டின் பேரிலேயே குறித்த வியாபாரிகள் மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (அ-2)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் வேலைக்கான கேள்வி அறிவித்தல்

*பின்வரும் வேலைக்கு இக்ராட்(ICTAD) C9 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட தேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.*

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-19.12.2011-27.12.2011 பி.ப.2 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:28.12.2011 நண்பகல்12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி:-28.12.2011 பி.ப 2 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தலைவர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏனைய வரி |
|---|---|---|---|---|
| 1 | மாதகல் காடாப்புலத்தில் புனரமைக்கும் கொல்களப் பகுதிக்கு சுற்றுமதில் புனரமைப்பு | 5000.00 | 1000.00 | 142.40 |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,
தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.
16.12.2011

(சி/5206)

# கவனத்தை திசை திருப்பவே பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தை அரசு பயன்படுத்தியது

## விக்கிலீக்ஸ் தகவல்

கவனத்தை திசை திருப்பும் நோக்கில் இலங்கை அரசாங்கம் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை பயன்படுத்தியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவண முத்து மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா ஆகியோர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளனர்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜதந்திரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நீண்டகால அரசியல் தீர்வுத்திட்டம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதனை தவிர்ப்பதற்காக அரசாங்கம் 13 ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையில் அரசாங்க அதிகாரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்டோருடன் நடைபெற்ற சந்திப்புக்கள் தொடர்பில் அமெரிக்கத்தூதரகம் தகவல்களை அனுப்பி வைத்துள்ளது.

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி அமெரிக்கத்தூதுவர் பற்றீசியா புட்டினீசினால் இந்தத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாற்றுக் கொள்கைகளுக்காக கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து, தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா, கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கீதபொன்கலன், சவுதி அரேபியாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாவெட் யூசுப் ஆகியோருடன் நடத்தப்பட்ட சந்திப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தக்வல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் சமூகத்தின் பிரச்சினைகள், இடம்பெயர் மக்கள் சுதந்திரமாக நடமாடுதல், அரசியல் சாசனத்திருத்தம் போன்றன தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இடம்பெயர் மக்களை தடுத்து வைத்தல் இலங்கை சட்டத்திற்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற்றம், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களின் அவசியம் ஆகியனவற்றை குறித்த புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதிகாரப்பகிர்வு, 13 ஆம் திருத்தச் சட்டமூலத்தின் பலவீனங்கள், மாகாண சபைகளுக்கு அரசாங்கம் போதியளவு அதிகாரங்களை வழங்காமை போன்றன தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி 17 ஆம் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தாமை, ஆணைக்குழுக்கள் அரசியல் மயப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஒளிவிழா

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஒவ்வோர் ஆண்டும் ஒளிவிழா யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இம்முறை திருமுறைக்கலாமன்றம் யாழ்ப்பாணத்துடன் இணைந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருமுறைக்கலாமன்றத் தலைவர் மரிய சேவியர் அடிகளின் ஆசியுடன் கலைத் தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது ஆண்டு ஒன்று முதல் ஏழு வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என். சிறிதேவி அறிவித்துள்ளார். (அ)

# கனடா தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு இடைக்காலத்தடை

## கனேடிய அரசு நிறுத்தியது

(கொழும்பு)

கனடாவின் டொரண்ரோ பகுதிக்கான தமிழ் அமைப்பொன்றின் சேவை, அமைப்பு என்ற தகைமையை கடந்த வாரத்திலிருந்து கனேடிய சமஷ்டி அரசாங்கம் நிறுத்தம் செய்துள்ளது.

அதாவது, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்ற குழுக்களுக்கு இவ்வமைப்பு நிதி வழங்குகின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே இவ்வமைப்பின் சேவைசார் செயற்பாட்டை இடைநிறுத்தியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கனேடிய தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமானது கனடாவிற்கு வெளியே செயற்படும் சட்டரீதியற்ற சில நிறுவனங்களுக்கு 7 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளதாக கனேடிய வருமான அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

இத் தமிழ் அமைப்பின் செயற்பாட்டை நிறுத்தம் செய்வதற்கான அறிவித்தலை கனேடிய வருமான அமைப்பு வழங்கியிருந்தது.

கனேடிய தமிழ் அகதிகள் அமைப்பின் மீது முதன் முதலில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அதாவது, 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 2008 ஆம் ஆண்டு மே மாதம் வரை இப்புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆய்வுசெய்யப்பட்டதன் பின்னரே இதன் மீது முதன் முதலில் எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டது. (அ-2)

# நடைபாதை வியாபாரத்தை விரைவில் தடைசெய்ய வேண்டும்

வவுனியா நகரப்பகுதியில் அதிகரித்து வரும் நடைபாதை வியாபாரத்தை நாளை மறுதினம் திங்கட்கிழமையில் இருந்து நிறுத்தாவிட்டால் சாத்வீக முறையில் கடையடைப்பு போராட்டத்தை நடத்துவோம் என வவுனியா வர்த்தகர் சங்கம், வவுனியா நகரசபைத் தலைவருக்கு நேற்று கடிதம் மூலமாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வர்த்தகர் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வர்த்தக சங்கமானது பல தடவைகள் வவுனியா நகரசபை தலைவரிடமும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமும் சந்திப்புக்களை நடத்தி எமது வர்த்தக சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களை தெரியப்படுத்தினோம்.

இருந்த போதிலும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் நகரசபை மேற்கொள்ளவில்லை. தற்போதைய நகரசபை தலைவரை சந்தித்து உரையாடுவதற்கு எமது நிர்வாகசபை உறுப்பினர்கள் அனுமதி கேட்ட பல சந்தர்ப்பங்களில் தலைவர் நேரம் ஒதுக்கித் தரவில்லை.

அரசாங்கத்திற்கும் நகரசபைக்கும் அன்றிலிருந்து இன்றுவரை வரி செலுத்தியும் மக்களுக்கு வேலை வழங்கியும் அரச, தனியார் நிறுவனங்களுக்கு நன்கொடைகள், விளம்பரங்கள் வழங்கியும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருளுதவி வழங்கியும் வருகின்றோம்.

அத்தோடு நாங்கள் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பொருள், பணம், சரீர உதவிகளையும் செய்து வருகின்றோம். இதனை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகின்றோம்.

நடைபாதை வியாபாரத்தால் மக்கள் நடமாட முடியாமல் உள்ளத்துடன் ஆங்காங்கே வாகனங்களை வைத்து வியாபாரமும் நடைபெறுகின்றது. இதனை அந்த இடங்களில் மக்கள் கூடும் போதும் வாகனங்கள் பிரயாணம் செய்யும் போதும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எமது நிறுவனங்களுக்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கும் இடமில்லாத நிலையுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் நடைபாதை வியாபாரத்தை நிரந்தரமாக தடை செய்யாவிட்டால் வர்த்தக சங்கத்தின் நிர்வாக சபை முடிவிற்கிணங்க கடைகளை அடைத்து அமைதியான சாத்வீக ரீதியிலான போராட்டம் ஒன்றினை நடத்த தீர்மானித்துள்ளோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கில் 100 விவசாயக்குளங்கள் புனரமைப்பு செய்ய நடவடிக்கை


## நீர்ப்பாசன அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன

(கொழும்பு)

வடக்கில் அடுத்த வருட முதல் காலாண்டுக்குள் 100 விவசாயக் குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக நிதியொதுக்கீடு மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் விவசாய நீர்ப்பாசன அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்ளில் மீள்குடியேறியுள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுவதாகவும் அவர்கள் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தூர்ந்து போயுள்ள மற்றும் கைவிடப்பட்ட குளங்களை புனரமைக்க வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் ரிசாத் பதியுதீன் சந்திரசேனவுக்கு கூறியிருந்தார்.

அத்துடன் மன்னாரில் மறிச்சுக் கட்டி, வெல்லாங்குளம், பெரியமடு மற்றும் வவுனியாவில் சூடு வெந்தபுளவு பகுதிகளில் கமநல சேவை நிலையங்களை அமைக்கவுள்ளமை தொடர்பிலும் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யாழ். பொதுநூலகம் உள்ளிட்ட யாழ்ப்பாணத்தில் முக்கிய கட்டடங்கள் வடிவமைத்த ஈழத்தின் புகழ்பெற்ற கட்டடக்கலை நிபுணர் அமரர் வி.எஸ். துரைராஜாவின் நினைவு அஞ்சலி கூட்டம் நேற்று முன்தினம் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அமரர் துரைராஜாவின் உருவச் சிலை வைக்கப்பட்டிருப்பதையும் யாழ். மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நினைவுரையாற்றுவதையும் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# பிரிட்டனின் நடவடிக்கைக்கு எதிராக போராட்டம்; 55 பேர் நாடு திரும்பினர்

## சிலர் பொலிஸாரால் கைது




தமிழர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்ப வேண்டாம் எனக்கோரி நேற்று முன்தினம் சிறைச்சாலையின் முன் வீதிமறிப்பில் ஈடுபட்டோரை பிரித்தானியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி தினத்தில் பிரித்தானியாவில் இருந்து 50 இலங்கையர்களை நாடுகடத்துவதற்காக ஹீத்துறூ விமான நிலையத்திற்கு அருகாமையில் உள்ள சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த வேளையிலேயே ஏசிரி நவ் அமைப்பினரால் அச்சிறைச்சாலையின் முன் திடீர் வீதிமறிப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

9 பேர் மட்டும் துணிச்சலாக மேற்கொண்ட இப்போராட்டத்திற்கு ஆதரவு வேண்டி கைத்தொலைபேசி ஊடாக குறும் தகவல் செய்திகள் அனுப்பப்பட்ட போதும் போதிய மக்கள் அவ்விடத்திற்கு செல்லாத காரணத்தால் மக்கள் பலமின்றிய போராட்டத்தை இலகுவாக பிரித்தானியப் பொலிஸார் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட சிலரை கைது செய்வதோடு நாடு கடத்துவதற்காக அடைத்து வைக்கப்பட்டிருந்தவர்களை பின் வாசல் வழியாக விமான நிலையம் அழைத்துச் செல்லப்பட்டும் உள்ளனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இப் போராட்டம் பலனற்ற நிலையில் பிரித்தானியக் குடிவரவு திணைக்களத்தினால் நேற்று முன்தினம் இலங்கைக்கு அனுப்பப்படும் 50 பேரில் அடங்கியுள்ள தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாக அப்போராட்டத்தை மேற்கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப் போராட்டத்தை மேற்கொண்டிருந்த மேற்படி அமைப்பினர் கடந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னரான இரண்டு வருடங்களாக தமிழர்களுக்கு நீதி கோரியும், இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களையும் படுகொலைகளையும் கண்டித்தும் பல போராட்டங்களை நடத்தி வருவதும் இவ் அமைப்பில் ஒருசில தமிழர்களை தவிர ஏனையவர்கள் வேற்றினத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. குறுகிய நேரத்தில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் வந்து போராட்டத்தில் கலந்து கொண்டனர். ஆயினும் நேற்று பிற்பகல் 55 இலங்கையர்கள் கட்டுநாயக்காவை வந்தடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தலைமன்னாருக்கான புகையிரத பாதையும் நிர்மாணிக்கப்படும்

## அமைச்சர் குமார வெல்கம

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களுக்கு ஜே.வி.பியினர் தீமூட்டினர். வடக்கில் தண்டவாளங்களை நாங்கள் உடைக்கவில்லை. உடைத்து சேதமாக்கிய தண்டவாளங்களை நாம் நிர்மாணிக்கிறோம். போக்குவரத்துத் துறையை கட்டியெழுப்புகின்றோம் என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போக்குவரத்து சேவையில் பிரச்சினை இருக்கின்றது. புகையிரத சேவைகளை இன்னும் மேம்படுத்த வேண்டும் என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அதற்காக தனியார்துறைக்கு 40 வீதத்தை வழங்குவதற்கு யோசித்துள்ளோம்.

கண்டி- கொழும்பு சொகுசு புகையிரதச் சேவையில் புகையிரதப் பெட்டியொன்று பூட்டப்பட்டுள்ளது. இதனை தனியார்துறையினரே செய்கின்றனர். பயணச் சீட்டின் பணம் புகையிரதத் திணைக்களத்திற்கு கிடைக்கும். பேருந்துகளுக்கு தீமூட்டியோருக்கு இவை தெரியாது.

பளைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிர பாதை புகையிரத நிலையங்களுடன் நிர்மாணிக்கப்படும். புகையிரத தண்டவாளங்களை நாம் சீரழிக்கவில்லை. இன்று நிர்மாணிக்கின்றோம். ஓமந்தைக்கும் பளைக்குமிடையிலான 9 கிலோ மீற்றர் தூரத்தை நிர்மாணிப்பதற்கு 2 வருடங்கள் சென்றன. இந்நிலையில் வடக்கிற்கான புகையிரதப் பாதையை விரைவாக நிர்மாணிக்க வேண்டும். அதற்காகவே அதன் பொறுப்பை இந்தியாவிடம் கையளித்தோம்.

தலைமன்னாருக்கானபுகையிரதப்பாதையும் நிர்மாணிக்கப்படும். முதல் கட்டமாக மடுவரையிலும் நிர்மாணிக்கப்படும் என்பதுடன் பொது போக்குவரத்து சேவையை வடக்கில் மேம்படுத்துவதற்கு 89 பேருந்துகளும் கிழக்கிற்கு 23 பேருந்துகளும் என மொத்தமாக 52 பேருந்துகள் கையளிக்கப்பட்டன என்றார். (அ-2)

# வதிவிட விசா கோருவோருக்கு கட்டாய மருத்துவ சோதனை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வதிவிட விசா கோரும் வெளிநாட்டவர்களுக்கு கட்டாய மருத்துவ சோதனை நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொள்கை அளவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் வதிவிட விசா கோரி வருவதாகவும் இவர்களிடம் மருத்துவ சோதனை நடத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குடிவரவு சுகாதாரப் பிரிவும் இலங்கை சுகாதார அமைச்சும் கூட்டாக இணைந்து இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; மாத்தறையில் சம்பவம்

மாத்தறை அக்குரஸ்ஸ - தெதியகல பிரதேசத்தில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வீட்டில் இருந்த போது அவர் மீது இனந்தெரியாத நபர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக அக்குரஸ்ஸ பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த நபர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் தொடர்பில் இதுவரை தகவல் கண்டறியப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# காணாமல் போன சம்பவத்திற்கும் இராணுவத்திற்கும் தொடர்பில்லை

## யாழ்.கட்டளைத்தளபதி தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி.கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் இருவர் காணாமற்போன சம்பவத்துடன் இராணுவத்திற்கு எவ்வித தொடர்பும் கிடையாது. இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என யாழ்.கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் காணாமற்போன சம்பவத்துடன் இராணுவத்திற்கு தொடர்பு இருப்பதாக நாம் இலங்கையர் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் தகுந்த ஆதாரங்களுடன் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல் போதல் சம்பவம் குறித்து பொலிஸார் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் சர்வதேச சமூகத்திடம் அனுதாபம் திரட்டும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும் கட்டளைத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் வடக்கிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் இலங்கையர் அமைப்பின் அமைப்பாளர் உதுல் பிரேமரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜனாதிபதி தங்க கிண்ண கரப்பந்தாட்டப் போட்டி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதி தங்க கரப்பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் முல்லை மாவட்ட விளையாட்டு அதிகாரி பிறின்சிலம்பேட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தலா இரண்டு அணிவீதம் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 10 அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டியில் வெற்றி பெறுகின்ற பெண்கள் அணியும் ஆண்கள் அணியும் ஜனாதிபதி தங்கக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ளவுள்தாக தெரிவிக்கப்படுகிறது. (அ-3-15)

# கடந்த வருடத்தில் 20 ஆயிரத்து 413 வீதி விபத்து சம்பவங்கள்

## பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க

(கொழும்பு)

நாட்டின் போக்குவரத்துத் துறைக்கு ஐக்கிய தேசியக்கட்சி இழைத்த பழி பாவத்தை இன்று மஹிந்த அரசாங்கம் சுமந்து கொண்டிருப்பதாக போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

இரண்டு கோடி மக்களே உள்ள இந்நாட்டில் 44 இலட்சத்து 33 ஆயிரத்து 968 வாகனங்கள் பாவனையில் உள்ளன. இது சனத்தொகையில் ஐவருக்கு ஒரு வாகனம் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க இங்கு மேலும் கூறுகையில், இன்றைய அளவில் போக்குவரத்துத்துறை பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது என்றால் அது ஐ.தே.க. வினாலேயே ஆகும். எனினும் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இப்போது போக்குவரத்துத்துறை பாரிய வளர்ச்சியினைக் கண்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் புகையிரத போக்குவரத்துச் சேவையில் பாரிய ஊழியர் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை இங்கு கூறியாக வேண்டும். அதேபோன்று தனியார் போக்குவரத்து துறையை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை ஐ.தே.க.வகுத்திருக்கவில்லை.

எனினும் நாம் தனியார் துறையினருக்கு மானியங்களை வழங்கியிருக்கிறோம். இன்று எமது நாடு இரண்டு கோடி மக்களையே கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இங்கு 44 இலட்சத்து 33 ஆயிரத்து 968 வாகனங்கள் பாவனையில் இருக்கின்றன.

இதேவேளை, கடந்த வருடத்தில் மாத்திரம் 20 ஆயிரத்து 413 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் காலங்களில் வீதி விபத்துக்களை குறைக்கும் வகையில் புதிய தொழில்நுட்ப முறைமைகள் உள்வாங்கப்படவிருக்கின்றன என்றார். (அ-2)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




**(அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்)**

**ஒன்பதாமிடத்தில் சனி! பொன் பொருள் சேரும் இனி!**

**எதிர்காலத்தில் மனித சமுதாயத்திற்கு எந்த வகையிலாவது பயன்பட வேண்டும் என்று சொல்லும் கும்ப இராசி நேயர்களே!**

உங்கள் இராசிநாதன் சனி என்பதால் எந்தக் காரியத்தையும் நிதானமாகவே செய்வீர்கள்.நீங்கள் அமைதியைக் கடைப் பிடித்து அருகில் இருப்பவர்களின் ஆதரவைப் பெருக்கிக் கொள்பவர்கள்.

தன்னம்பிக்கையை இழக்கிற பொழுதெல்லாம் ஆன்மீகப் பெரியோர்களிடம் ஆலோசனை கேட்டு அதன் வழியே நடந்து வெற்றி பெற்றுவீர்கள். இராசிநாதனாக மட்டுமல்லாமல் பன்னிரெண்டாமிடத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால் ஒரு பிரச்சினை முடிந்தவுடன் அடுத்த பிரச்சினை தானாகவே உங்களைத் தேடி வரும்.

குடும்ப ஸ்தானாதிபதியாக உங்களுக்கு குரு அமைந்தாலும் கூட சப்தமாதிபதியாக சூரியன் இருப்பதால் பொருத்தம் பார்த்து திருமணம் செய்வதே நல்லது. இளமையில் உங்களுக்கு போராட்டமான வாழ்க்கை அமைந்தாலும் நடுப்பகுதி முதல் நல்ல வாழ்க்கை அமையும். இப்படிப்பட்ட உங்களுக்கு இந்த சனிப் பெயர்ச்சி சாதமான பலன்களைத் தருமா? என்பதைப் பற்றி பார்ப்போம்.

### ஒன்பதாமிடத்துச் சனி பொன்-பொருளைத் தருமா?

மார்கழி 5 ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 3,6,11 ஆகிய இடங்களைப் பார்த்து பலன்களை வழங்கப் போகிறார். உச்ச சனியாக இருந்து பார்ப்பதாலும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் முடிவடைந்தாலும் அற்புத பலன்கள் இனி உங்களுக்கு வந்து சேரப் போகின்றன.

இந்த நேரத்தில் பெயர்ச்சிக்கு முன்னதாகவே சனீஸ்வரரை வழிபட்டு வந்தால் நெஞ்சில் வஞ்சமில்லாது பழகுபவர்களின் எண்ணிக்கையும் கூடும். நிகரில்லாத வாழ்க்கையும் அமையும். பொதுவாக சனி விலகும் பொழுது நல்லதையே செய்வார். யோக பலம் பெற்ற நாளில் சுய ஜாதக ரீதியாக வழிபாடுகளையும் மேற்கொண்டால் மாலை கிடைக்காதவர்களுக்கு மாலை கிடைக்கும். மழலை பிறக்காதவர்களுக்கு மழலை பிறக்கும். வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைக்கும்.

விருப்பங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். செவ்வாய் பலம் பெற்றிருப்பவர்களுக்கு வீடு கட்டும்யோகம் வந்து சேரும். குரு பலம் பெற்றிருப்பவர்களுக்கு பதவி வாய்ப்புக்கள், அரச யோகம் வந்து சேரும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

### மந்தன் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!

உங்கள் இராசிக்கு 9 இல் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 3,6,11 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. இதுவரை மன அமைதியின்றி தினமும் பிரச்சினைக்கு மத்தியில் வாழ்ந்த உங்களுக்கு மனநிம்மதி கூடப்போகின்றது. சகோதரர்கள் அடிக்கடி உங்களுக்கு சச்சரவுகளை கொடுத்தாலும் முடிவில் உங்கள் கருத்திற்கு ஒத்து வருவர். தொழில் ரீதியாக உடன் பிறப்புக்கள் வழியில் சேர்ந்த கூட்டு இனி பிரியலாம்.

தனித்து இயங்கினாலும் தக்க ஒருவருடைய உதவியோடு செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். காரணம் இராகு- கேதுக்களின் ஆதிக்கம் 4 மற்றும் 10 இல் இருப்பதால் ஆறாமிடத்தைச் சனி பார்ப்பதால் எதிரிகள் சரணடைவர்.

இல்லம் தேடி நல்ல செய்தி வந்துசேரும். உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றம், இலாகா மாற்றங்களை எதிர்பார்த்தவர்களுக்கு குறிப்பிட்டபடி வந்துசேரும். வங்கிகளில் கடனுதவி பெற்று சுயதொழில் செய்யலாம் என்ற எண்ணம் மேலோங்கலாம்.

ஆனால், ஆறாமிடத்தை சனி பார்ப்பதால் வாங்கிய கடனைத் திரும்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையை உருவாக்கி விடலாம். எனவே, ஒப்பந்தங்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

சனியின் பார்வை இலாப ஸ்தானத்தில் பதிவதால் பொருளாதார பற்றாக்குறை அகலும். பொருள் வளர்ச்சி கூடும். மாற்று மருத்துவம் உடல் நலத்தைச் சீராகும். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

அதன் பார்வை 2,10,12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் சுப காரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மின்சார சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### இராகு- கேது பெயர்ச்சிக் காலம்

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள்.21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலாவரப் போகிறார்கள். முதல் இராகு- கேது பெயர்ச்சிக் காலத்தில் பூர்வீக சொத்துக்களில் இருந்த வழக்குத் தீரும். பங்காளிப் பகைமாறும். கூட இருப்பவர்களால் ஆதாயம் கிடைக்கும்.

அடுத்த இராகு- கேது பெயர்ச்சிக்காலத்தில் திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் வந்து சேரலாம். குடும்பத்தில் குழப்பங்கள் வந்து சேரும். நிம்மதியும் நிலையான செல்வமும் வந்து சேர சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்வது நல்லது. அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இராகுவிற்கு அவசியம் பரிகாரம் செய்ய வேண்டும்.

### சனியின் வக்ரகாலம் பொற்காலமாக மாற...

துலாம் இராசியில் சனி உச்சம் பெறும் பொழுது ஐந்து முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 12 இற்கு அதிபதியாகவும் இருப்பதால் இந்த வக்ர இயக்கம் வளர்ச்சியையும் கொடுக்கும். தளர்ச்சியையும் கொடுக்கும். உடல் நலத்திற்கென்று ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். பொது வாழ்வில் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களில் மாற்றம் ஏற்படும். இக்காலத்தில் எள் தீபம் ஏற்றி சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது.

**எந்தக் காரியத்தையும் நிதானமாகவே செய்யும் ஆற்றல் கொண்டவர்கள்**

மேலும் சனி விலகும் நேரத்தில் சனீஸ்வரர் கோவிலில் அடியெடுத்து வைப்பதுடன் அதற்கு மறுநாளே ஒரு அனுமன் கோவில் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

### குருப்பெயர்ச்சிக்காலம்

துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகின்றது. 17.05.2012 இல் இடப இராசியிலும் 28.05.2013 இல் மிதுன இராசியிலும் 13.06.2014 இல் கடக இராசியிலும் குருபகவான் சஞ்சரிக்கப்போகிறார்.

இடபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 8,10,12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே, இழப்புக்களை ஈடு செய்யும் வாய்ப்புக் கிட்டும். அஷ்டமத்துச் சனியால் மூடிக் கிடந்த தொழிலை திறப்பு விழாச் செய்வீர்கள். வெளிநாட்டுப் பயணத்தில் இருந்த தடை அகலும்.

பகை வீட்டில் குரு சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் நினைத்ததை நிறைவேற்றும் தெய்வமாக விளங்கும் காளியம்மன் மற்றும் ஐயனார் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மிதுனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்கள் இராசியில் அதன் பார்வை முழுமையாகப் பதிகிறது. அத்தோடு 9,11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது.எனவே, தொட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறும். துணையாக இருந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிகள் வந்துசேர முன்னோர் படைப்புகளையும் மனித தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது.

கடகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது

### ஒன்பதாமிடத்துச் சனி உன்னதமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்குமா? .

இதுவரை உங்கள் இராசிக்கு எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது ஒன்பதாமிடத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். ஒன்பதில் உச்சம் பெறும் சனி

## சிவல்புரிசிங்காரம்

பொன், பொருளையும் கொடுப்பார்.

தொழிலில் இலாபம் கூடும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். நண்பர்கள் நல்ல காரியத்தை முடித்துக் கொடுப்பர். வீடு கட்டி குடியேறும் யோகம் உண்டாகும்.

### தொட்ட காரியங்களில் வெற்றிபெற வழிபாடு

இராசிநாதன் சனி உச்சம் பெறுவதால் நன்மையே அதிகம் சந்திப்பீர்கள். சனிக்கிழமை விரதமிருந்து காகத்திற்கு எள் அன்னம் வைப்பது நல்லது. குரு சந்நிதியில்,

குருவே நீ பார்த்தால் போதும்!
கோடியாய் நன்மை சேரும்!
அருள்தர வேண்டி உன்னை
அன்போடு துதிக்கின்றோமே!

என்று பாடுங்கள்.

ஒருமுறை குருவின் பார்வை உங்கள் மீது பட்டாலே ஒப்பற்ற வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

# தியானம்

## ஆனந்தத்தின் வாசல்



**ஆன்மீகம் 12**

கேள்வி: யோகா என்பது இந்து மதத்தைச் சார்ந்ததாகவே கருதப்படுகிறது. இது ஏதேனும் மதச்சார்புடையதா?

சத்குரு: யோகா என்பது ஒரு அறிவியல். உள்நிலை அறிவியல். தன்னிலை அறிவியல். அது இந்தக் கலாசாரத்தில் வளர்க்கப்பட்டிருக்கிறது. முதலில் இந்து என்பது ஒரு மதமல்ல. அது ஒரு புவியியல் அடையாளம். இந்தப்பகுதியில் பிறந்தவர்களுக்கு இந்து என்கிறோம். இது ஒரு புவியியல் அடையாளம் மற்றும் கலாசார அடையாளம். இது ஒரு மதரீதியான அடையாளமல்ல.

ஒரு மதரீதியான அடையாளம் உங்களுக்கு வேண்டுமானால் நீங்கள் எதையாவது நம்பவேண்டும். ஒரு இந்துக் குடும்பத்தில் தந்தையார் ஆண்கடவுளை வணங்கிக் கொண்டிருப்பார். தாயார் ஒரு பெண் கடவுளை வணங்கிக் கொண்டிருப்பார். குழந்தைகள் குரங்கினை வழிபட்டுக் கொண்டிருப்பார்கள். யாரோ ஒருவர் பாம்பினை வழிபட்டுக் கொண்டிருப்பார். ஆனால், அவர்கள் அனைவரும் இந்துக் குடும்பம்தான். வேறு எந்த மதத்திலும் இப்படிச் செய்ய முடியாது. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கடவுளை நீங்கள் நம்பினால் அவ்வளவுதான். ஆனால், இந்துக்கலாசாரத்தில் வந்தவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட ஒன்றின் மீதும் நம்பிக்கை கொள்வதில்லை. ஏனென்றால் இது ஒரு மதமல்ல. இது ஒரு கலாசார ரீதியான, புவியியல் ரீதியான அடையாளம். ஆனால் இந்தக் கலாசாரத்தில் ஆன்மீகம் என்பது மிக முக்கியமான பரிமாணம். இங்கு உங்களை ஆன்மீக அம்சமாகத்தான் அடையாளம் காண்கிறோம். பொருள் நிலை வாழ்வோடு எப்படி வேண்டுமானாலும் விளையாடலாம். ஆனால், ஒவ்வொரு மனிதரதும் அடிப்படை இலக்கு முக்திதான். விடுதலை அடைவது தான். அந்த வாழ்க்கையில் நீங்கள் சென்று கொண்டிருக்கும் போது பொருளை ஈட்டும் தேவையும், உணர்வு ரீதியான பாதுகாப்பின் தேவையும் உடல்ரீதியான பாதுகாப்பின் தேவையும் ஏற்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் குடும்பத்தை உருவாக்குகிறீர்கள். தொழிலை உருவாக்குகிறீர்கள். பல விடயங்களை உருவாக்குகிறீர்கள். அடிப்படையாக இந்து என்பவர் முக்தி என்பதை நோக்கித் தான் சென்று கொண்டிருக்கிறார். உச்சபட்ச விடுதலையை நோக்கித்தான் அவருடைய வாழ்க்கையே இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது அது சரிதான். ஆனால், அதேநேரத்தில் யோகாவை இந்துமதம் சார்ந்ததாகச் சொல்வது எப்படியென்றால் புவிஈர்ப்புவிசை யூதமதத்திற்கு சொந்தம் என்று சொல்வதைப்போல் இருக்கிறது. புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர் ஐசாக் நியூற்றன். அவர் ஒரு யூதர். யோகவை இந்து மதம் என்று சொல்வதும் அப்படிப்பட்ட முட்டாள்த்தனந்தான்.

யோகா என்பது தொழில்நுட்பம். அதை யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொளலாம். நீங்கள் அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும், அவ்வளவுதான். யோகா என்பது உள்நிலை நலவாழ்விற்கான ஒரு தொழில்நுட்பம். வெளிநிலை நலவாழ்விற்கான அறிவியலும் தொழில்நுட்பமும் இருப்பதைப் போல, உள்நிலை நலவாழ்விற்கும் ஒருதொழில் நுட்பம் இருக்கிறது. மனரீதியான அடையாளங்கள் இல்லாமல் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். அது நிரூபணமும் செய்யப்பட்டிருக்கிறது.

கேள்வி: யோகா ஒரு மனிதருக்குள் ஒருமைநிலை உருவாக உதவி செய்கிறதா?

சத்குரு: ஒருமை நிலை என்பது உருவாக்கக்கூடிய ஒன்றல்ல. ஒன்றுபட்டு இல்லாத நிலையை, ஒத்திசைவு இல்லாத நிலையை நாம்தான் உருவாக்கியிருக்கிறோம். ஏனென்றால், நமது உடல் இயக்க அமைப்புக்களை எப்படி கையாள்வது என்பது நமக்குத் தெரியவில்லை. நமது உடலும், உணர்வுகளும், சக்திகளும் எப்படி நடைபெறுகின்றன. என்பது நமக்குப் புரியவில்லை. கண்களை மூடிக் கொண்டு அவற்றைக் கையாள நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். யோகா என்பது மிகுந்த விழிப்புணர்வோடும் புரிதலோடும் கையாளும் ஒரு முறை. எனவே ஒருமை நிலை என்பதையும் ஒத்திசைவாய் இருப்பது என்பதையும் நாம் உருவாக்க வேண்டும் என்பதில்லை. வாழ்க்கை என்பதே ஒத்திசைவாகத்தான் இருக்கிறது. உயிர்த்தன்மை என்பதே அப்படிப்பட்டதுதான். பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்துமே அப்படித்தான் இருக்கிறது. நீங்களோ அல்லது நானோ பிரபஞ்சத்திலிருந்து தனியாக வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. என்னுடைய உள்மூச்சு, தாவரங்களுக்கு வெளிமூச்சு. தாவரங்களின் வெளிமூச்சே என்னுடைய உள்மூச்சு. இப்படி அனைத்துமே மிகச்சரியான ஒத்திசைவுடன் இருக்கின்றன.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து முஸ்லிம் புலவர்கள் உயர்த்திய தமிழ்

**02**

ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர், அவரது நிழலில் நின்று சுவாமி விபுலானந்தரின் வழிகாட்டலில் வளர்ந்து, கலாநிதியாகப் பரிணமித்த ஒருவரால் இருட்டில், கடந்த பல நூறு முஸ்லிம் தமிழிலக்கியங்கள் பளிச்சிடத் தொடங்கின.

தொடர்ந்து அந்தச் சேவையை அவர் ஆற்றுவதற்கு அலைகடலுக்கு அப்பால் பயணித்து, தமிழ் வளர்த்த நான் மாடக்கூடலாகிய மதுரையம்பதி காமராசர் பல்கலைக் கழகம் நுழைய வேண்டியிருந்தது.

அதற்கு கண்டியில் பிறந்த ஒரு மக்கள் திலகம் கேரளத்து எம்.ஜி.ஆர் தமிழக முதல்வர் என்ற தகுதியில் ஆற்றிய பங்களிப்பை முஸ்லிம் சமூகம் குறிப்பாக இலங்கை முஸ்லிம்கள் மறக்கவில்லை.

காமராசர் பல்கலைக்கழக இஸ்லாமியத் தமிழியல் துறைத்தலைவர் அவர் பெற்ற இருக்கை இலேசான தன்று. இத்தனைக்கும் அவர் ஒரு சிங்களப் பிரதேசத்தில் களுத்துறை மாவட்டம் பாணந்துறையில் பிறந்து வசதியற்ற வறுமைச் சூழலில் தமிழ் கற்றவர்.

இசை வித்தகர் உரைப்பது போல் எல்லாப்புகழும் இறைவனுக்கே!

இந்த இடத்தில் அவரது பெயரைத் தெரிவித்துப் பெருமை கொள்கிறேன். பலர் யூகித்தும் விட்டிருப்பீர்கள். அவர் கலாநிதி அல்லாமா ம.முகம்மது உவைஸ் அவர்கள். அந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு பெரும் நூலின் நான்கு தொகுதிகளில் மூன்றினைத் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கிய பெருமகன். இறுதியான நாலாவது, அவர்தம் மறைவின் பின் பீ.மு.அஸ்மல்கான் உழைப்பில் வந்துள்ளது. இப்பொழுது இவர் எமது கலாநிதி வகித்த பதவியில் அமர்ந்து பணியைத் தொடர்கிறார்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

"தமிழ் இலக்கியங்கட்கு ஒரு தமிழ் தாத்தா உ.வே.சா. அவர்களைப்போல இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கட்கு ம.மு.உவைஸ் அவர்கள் என்று கூறலாம். முஸ்லிம் அல்லாத தமிழ் புலவரும் இஸ்லாமியத் தமிழுக்கு தொண்டாற்றியுள்ள அருமைப் பாட்டினையும் எடுத்துக் காண்பித்துள்ளார்" என 1988 களில் ஒரு கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற திருச்சி தூயவளனார் தன்னாட்சி கல்லூரியின் தமிழ் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி கி.கீதா என்பவர் சுட்டியிருப்பது எம்மவருக்கு தமிழகத்தில் இருந்த செல்வாக்கைக் காட்டுகிறது. (இப்பொழுது இவர் ஒரு முனைவராக-கலாநிதியாக பரிணமித்து இருக்கலாம்)

இவ்வாறு கலாநிதி அல்லாமா உவைஸ் அவர்களது பெரும் பங்களிப்பில் அறுவடையான 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு' தொகுப்பிலிருந்தும் வேறு பல் சிறு ஆய்வு நூல்களிலிருந்தும் முஸ்லிம் புலவர்கள் உயர்த்திய தமிழைப் பரவலாக பக்கம் பக்கமாக அடையாளப் படுத்த முடியும்.


"உண்மையில் 19ஆம் நூற்றாண்டு வரை கவிதைகள் உருவில் வந்த காப்பியங்கள் மட்டுமே இலக்கியம்" என்று கருதப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சி பெற்று, இலக்கியத்தையும் வளர்த்தது. சிறு கதை, பெருங்கதை, -சிறு பாடல்கள், நாடகங்கள், கட்டுரைகள் எல்லாமே இலக்கியம் ஆயின. சிறுதுணுக்குகள், சிரிப்புகள் கூட இலக்கியமாக வளர்ந்தன. அச்சேறிய எல்லாமே இலக்கியத்தில் அடக்கப்பட்டது. முத்த மிழும் இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது என்பார் முதுபெரும் இதழாளர் ஆய்வாளர் மா.சாமி.

முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டானது இஸ்லாமிய சமயம் தமிழகத்திற்கு வந்த நானூறு ஆண்டுகளுக்குப்பின் பன்னிரண்டாம் நூற்றாண்டில், முதல் இஸ்லாமிய இலக்கியமாக பல்சந்த மாலையில் தொடங்கி 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியான இன்று வரை ஏறக்குறைய நலாயிரத்திற்கும் மேற்பட்ட இலக்கியங்கள் படைத்து இன்றும் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றனர்.

**மானா மக்கீன்**

(தொடரும்)

# வாழையில் பீடைகளும் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

16-XIII

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வாழையில் தலையிடியாயிருக்கும் பீடைகளைப் பற்றியும் அவற்றை எவ்வாறு முகாமைத்துவப்படுத்துவது பற்றியும் விரிவாக இதுவரை பார்த்திருக்கிறோம். இப்பீடைகளின் தாக்கத்தினால் வாழைச் செய்கை பாதிக்கப்படுவதனை தவிர்க்க அவற்றை இனங்கண்டு கட்டுப்படுத்தவேண்டியது அவசியமாகும். அதேநேரத்தில் எங்களூர் வாழைச் செய்கையாளர்களை மெச்சவும் வேண்டும். பல ஆண்டுகளாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் உள்ளீடுகள் கிடைக்காத நேரத்திலும் நீங்கள் வாழைச் செய்கையை கைவிட்டதேயில்லை. இயற்கையை நேசித்து செய்த பயிர்ச்செய்கையல்லவா.மக்கள் ப்ல இன்னல்களுக்குள்ளான நேரத்திலும் மலிவு விலையில் வாழைப்பழத்தை பெறக்கூடியதாயிருந்தது. இதே நிலையில் இன்னும் எங்களூர் வாழைச் செய்கையாளர்கள் இருப்பதை அறிந்து உண்மையில் உவகையடைகின்றோம். பலர் இன்னும் வாழைக்கு எதுவிதமான பீடைநாசினியும் பயன்படுத்துவதில்லை என்பது சூழலியலாளர்களுக்கு இனிப்பான செய்தி.

எமது அறிவுக்கேற்ப வாழையில் ஏற்படும் பீடைகளையும் நோய்களையும் இனங்காண முடிந்தபோதும் ஒரு சில அறிகுறிகளை இன்னமும் இதுவென இனங்காண முடியாதிருக்கின்றது. குறிப்பாக வாழைத் தண்டுகள் செம்மஞ்சள் நிறமாவதுடன் தண்டினது அடிப்பகுதி வெடித்தும் காணப்படுகின்றது. இவை தவிர இலையில் நடு நரம்பினது இருபுறமும் சமாந்தரமான மெல்லிய பச்சை நிற கோடுகளும் நடு நரம்பிற்கு செங்குத்தாக இலைப்பரப்பிலுள்ள நரம்புகளுக்கு சமாந்தரமாகவும் காணப்படும். அறிகுறிகள் வைரசு தொற்றினை குறித்துக் காட்டினும் அவை வைரசு தொற்றுக்கானதாக இனங்காணப்படவில்லை. இவைபோன்ற அறிகுறிகள் போரோன் நுண்ணூட்டச் சத்தினது குறைபாட்டால் ஏற்பட வாய்ப்புண்டு. இதைவிட மண்ணின் தன்மைக்கேற்பவும் நுண்ணூட்டச்சத்து வேறுபட இடமுண்டு. இதற்கேற்ப வாழைக்குத் தேவையான சத்துக்களை இடுதல் வேண்டும்.

### களைகளை கட்டுப்படுத்துவது அவசியம்


வாழைச் செய்கையிலீடுபடும் இடங்களில் இருக்கும்களைகளை இயன்றளவிற்கு அகற்றிவிடுவது என்றுமே நல்லது. களைகள் வாழையில் சேதத்தை உண்டுபண்ணும். குறிப்பிட்ட பீடைகள் மற்றும் நோய்களுக்கு விருந்து வழங்கிகளாக இருப்பதனால் அவை பெருகவும் தொடர்ந்து வாழை மரங்களில் தங்கி வாழ்வதற்கும் ஏதுவாகிவிடும். வாழைத்தோட்டத்தை என்றுமே சுத்தமாக வைத்திருத்தல் பீடைகள் பெருகுவதை தவிர்க்கும். அதே வேளையில் வாழைக்கிடையில் ஊடுபயிராக விருந்துவழங்கிஅல்லாதபயிர்களைவளர்க்கலாம்.

### வாழைத்தண்டு மீதிகளை என்ன செய்யலாம்?

வாழைத்தோட்டத்தில் வாழைக்குலையை வெட்டியபின் வெட்டிச்சரிக்கப்படும் வாழையின் தண்டினை அப்படியே விட்டுவிடுவதனை அவதானிக்கலாம். தண்டினை வெட்டும் போதும் இயன்றளவிற்கு அடியொட்டி வெட்டுவது சிறந்தது. வெட்டியபின் விடப்படும் தண்டின் மீதிகளின் நீள்மூஞ்சி வண்டுகள் இலகுவில் பெருகவாய்ப்புள்ளது. மேலும் வெட்டி கீழே போடப்படும் வாழைத்தண்டினை சிறிய கீலமாக வெட்டி ஆங்காங்கே வைத்து இவ் வண்டுகளை கவர்ந்திழுத்து கட்டுப்படுத்தலாம். ஏனைய தண்டு மற்றும் வாழையிலை மீதிகளை சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை மண்புழுவின் உதவியுடன் கூட்டெருவாக்கி பின் வாழைக்கு இடலாம். ஆங்காங்கே மண்ணினுள் புதைக்கும் வழக்கமும் உண்டு. அதனை செய்யும் போது பீடைகள் மற்றும் நோய்கள் பெருகாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

### வாழையில் மாவுப்பூச்சியின் தாக்கம்

அண்மைக்காலங்களில் வாழைக் குலைகளில் வெண்ணிற மாவுப்பூச்சியின் தாக்கம் இருப்பதையும் அதனால் வாழைச் சீப்புகள், பழங்கள் கறுத்து அழுகுவதையும் அவதானிக்கலாம். வாழைக்குலையில் பழங்கள் பழுக்கும் போது மாவுப்பூச்சிகளின்தாக்கம் அதிகரித்திருப்பதை காணலாம்.மாவுப் பூச்சியின் தொற்றுதலேற்படாதவாறு வாழைக்குலைகளை பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியம். இதற்காக வாழைக்குலை பழுக்கும் நேரத்தில்




இரசாயனங்களை விசிறுவதனால் அவை நஞ்சாக உண்ணுபவர்களைச் சென்றடையும். பூச்சி நாசினியை விசிறிவிட்டு வாழைக் குலைகளை உடன் அறுவடை செய்யாதீர்.

### வாழைக்குட்டிகளின் தெரிவு

வாழையிலுள்ள பீடைகளின் மற்றும் நோய்களின் பரம்பலுக்கு வாழைக்குட்டிகளே முதன்மைக் காரணியாக அமைந்து விடுகின்றன. பீடைகளின் தாக்கம் அதிகமாகவுள்ள வாழைத்தோட்டத்திலிருந்து வாழைக் குட்டிகளை நடுகைக்காக தெரிவு செய்யும்போது அவதானமாக இருக்க வேண்டும். நோயுற்ற வாழையினடியிலிருந்து இவ்வகை வாழைக்குட்டிகளை பெறுவதனை முழுவதுமாக தவிர்ப்பதே சிறந்தது.

இதன்மூலம் புதிதாக வாழைத்தோட்டத்தை உருவாக்கும் போது பீடை மற்றும் நோயற்ற நிலையை தோற்றுவிக்கலாம். மேலும் வாழைத்தோட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருதல் அவசியமாகும். இன்னும் வாழைச் செய்கையாளர்கள் அனைவரும் இணைந்து ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை முன்னெடுத்தால் இன்னும் சிறப்பாகஇதனைநடைமுறைப்படுத்தலாம்.

வாழைக்குரிய பசளையை பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் இடுவதன் மூலமாக வாழையை பீடை மற்றும் நோயிற்கு எதிர்ப்புத் தன்மையுடையதாக வளர்க்கலாம். இதுவும் இப்பிர ச்சினைகளை குறைப்பதற்கு உதவியாக இருக்கும். வாழைக்குட்டிகளை நடுவதற்கு முன்பு அதனடியை ரைக்கோடேர்மா பூஞ்சண கரைசலால் பரிகரித்து நடவும். ரைக்கோடேர்மா பூஞ்சணத்தை வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் தமக்குரிய சிறிய ஆய்வுகூடத்தில் உற்பத்தி செய்கின்றது. எமது தொழில்நுட்ப உதவியுடனும் கண்காணிப்புடனும் உற்பத்தி செய்யப்படும் விவசாயியின் நண்பனான இப்பூஞ்சணம் வாழையில் ஏற்படும் பூஞ்சணம் மற்றும் விலாங்குப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்த வல்லது.ஒரு பங்கு இப்பூஞ்சணபவுடரை ஐந்து பங்கு நீரில் கரைத்து வாழைக்குட்டியினடிப்பகுதிக்கு விசிறலாம் அல்லது பரிகரிக்கலாம். விவசாயிகளின் ஒன்றியத்தினால் உற்பத்தி செய்யப்படும் இப்பூஞ்சண கலவை மண் வாழ் பூஞ்சண ங்களையும் விலாங்குப் புழுக்களையும் கட்டுப்படுத்த பேருதவியாயிருக்கும். இயற்கையு டனிணைந்த முறைகளை விரிவுபடுத்தி இயற்கையினுதவியுடன் பீடை முகாமைத்துவத்தை மேற்கொள்வதே இனிவரும் பசுமைப்புரட் சியின் நோக்கமாயிருக்கும்.

(தொடரும்)

# முடக்கப்பட்ட 5 இணையத்தளங்களில் ஸ்ரீலங்கன்மிரர் தளத்துக்கு விமோசனம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கன் மிரர் இணையத்தளத்தின் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபடுகின்றது.நபர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அவதூறு ஏற்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அண்மையில் அரசாங்கத்தினால் முடக்கப்பட்ட ஐந்து இணையத்தளங்களில் ஒரு இணைத்திற்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

சில நிபந்தனைகளின் அடிப்படையில் தடை நீக்கப்பட்டுள்ளதுஎன இலங்கைதொலைத் தொடர்பு ஆணையகம் அறிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத இணையத்தளங்களுக்கான இணைப்பை உள்ளடக்கக் கூடாது என்ற நிபந்தனை உள்ளிட்ட சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இணையத்தளம் முடக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றில் அடிப்படைஉரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது .

இது தொடர்பில் விசாரணை நடத்திய நீதிமன்றம் நிபந்தனை அடிப்படையில் இணையத்தளத்திற்கான தடையை நீக்க அனுமதி அளித்துள்ளது.

எனினும் ஏனைய நான்கு இணையத்தளங்களும்தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன.

தடையை நீக்குமாறு கோரி அண்மையில் சுதந்திர ஊடக அமைப்பு நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தேன்

## லியாம்பொக்சின் நண்பர் அடெம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தாம் ஈடுபட்டதாக பிரித்தானிய முன்னாள் பாதுகாப்பு செயலாளர் லியாம்பொக்சின் நெருங்கிய நண்பரான அடெம் வெரிட்டி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீண்ட காலமாக அமுலில் இருந்த அவசர காலச் சட்டத்தை நீக்குவதற்கு லியாம்பொக்ஸ் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயங்களில் தனது நண்பரை சட்டவிரோதமான முறையில் அழைத்துச் சென்ற குற்றச்சாட்டின் காரணமாக லியாம் பொக்ஸ் அண்மையில் தனது பதவியை துறக்க நேரிட்டது.

அடம்வெரிட்டி லியாம்பொக்சுடன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மிக நீண்ட மௌனத்தின் பின்னர் முதல் தடவையாக லியாம் பொக்ஸுடனான உறவு குறித்து தகவல் வெளியிட்டுள்ளார். பொக்ஸ் பதவியை துறப்பதற்கு தாமும் ஒரு வழியில் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உயர்தர பெறுபேறுகளை இவ்வாரம் வெளியிடமுடியாது

## பரீட்சைகள் ஆணையாளர்

2011 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இவ்வாரம் வெளியிடப்படமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இஸட் புள்ளிகள் தொடர்பாக பல்கலைக்கழக மா்னியங்கள் ஆணைக்குழு தனது தீர்மானத்தை அறிவிக்காமையே இதற்கு காரணம் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புதிய பாடத்திட்டம் மற்றும் பழைய பாடத் திட்டம் தொடர்பான மேற்படி புள்ளி விவகாரம் தொடர்பான முடிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதுவரையில் அறிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இவ்வாரம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்படுவதற்கு வாய்ப்பில்லை. இஸட் புள்ளி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன் 3-4 தினங்களில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட முடியும் எனவும் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# 30 ஆண்டுகளாக அரங்கேற்றப்பட்ட சோக நாடகம் முடிவடைந்துள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாக அரங்கேற்றப்பட்டு வந்த சோக நாடகம் தற்போது முடிவடைந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாமரை தடாகம் மஹிந்த ராஜபக்ஷ கல்லயரங்கினை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அழுது புலம்பி கவலைப்படும் யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் செழுமையை பிரதிபலிக்கும் நாடகங்களை அரங்கேற்றக் கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

நூறு ஆண்டுகள் கலைச் சேவை ஆற்றி வரும் டவர் அரங்கைப் போன்றே தாமரைத் தடாகம் அரங்கும் நாட்டு மக்களுக்கு அரிய கலைச் சேவைகளை ஆற்றும் என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மக்களின் பௌதீக வாழ்க்கையை கட்டியெழுப்புதல் மற்றும் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# அரச வங்கியின் கடனட்டை இயந்திரத்தில் 66 இலட்சம் ரூபா திருடிய சந்தேக நபர் கைது

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் பிரதேச அரச வங்கியொன்றின் கடனட்டை இயந்திரத்தின் மூலம் 66 இலட்சம் ரூபாவை திருடியதாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர் போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவர் எனக் கருதப்படுவதாகவும் பேராறு பகுதியில் ஒழிந்திருந்த போது இவரைக் கைது செய்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்படும்போது சந்தேக நபரிடமிருந்து 19 இலட்சம் ரூபாவை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி பேராறு பகுதியிலுள்ள அவரின் வீட்டிலிருந்து 42 இலட்சம் ரூபா கைப்பற்றப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின் இந்நபர் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். (அ-2)

# யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதிலளிக்க ஏற்பாடு

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர்குழு அறிக்கைக்கு பதிலளிக்கப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட குழுவினர் யுத்தம் தொடர்பில் சமர்ப்பித்த அறிக்கையில் தவறான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த போலியான குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் இராணுவத்தினர் பதில் அறிக்கை ஒன்றை தயாரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினர் நிலைநிறுத்தப்பட்ட விதம் தொடர்பான தரவுகள் அம்பலப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த சூன்ய வலயம் தொடர்பிலும் தகவல்கள் வெளியிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிபுணர் குழு அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நிபுணர் குழு அறிக்கையில் பல்வேறு பிழையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை பிரதிவிதிவிட பிரதிநிதி சவேந்திர சில்வா ஏற்கனவே விளக்கமளித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கின்னஸ் சாதனைக்கு தயாராகிறது வெலிக்கடைச் சிறைச்சாலை

உலகின் மிக நீளமான புதுவருட வாழ்த்து அட்டை ஒன்றை தயாரித்து புதிய கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் வெலிக்கடை சிறைச்சாலை களமிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதுவருட வாழ்த்து அட்டையை தயாரிக்கும் பணியில் கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் எனப் பலர் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 195 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டு தயாரிக்கப்பட்டு வரும் இவ் வாழ்த்து அட்டை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)




★ 942-நோர்மண்டியின் முதலாம் வில்லியம் படுகொலை செய்யப்பட்டான்.

★ 1398-சுல்தான் மெஹ்மூடின் படைகளை டில்லியில் வைத்து டீமூர் படைகள் தோற்கடித்தன.

★ 1577-பிரித்தானிய அரசி முதலாம் எலிசபெத்துக்காக அமெரிக்காக்களின் பசுபிக் பெருங்கடல் பகுதியை ஆராய்வதற்காக பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்து பிளைமவுத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டான்.

★ 1718-பெரிய பிரித்தானியா ஸ்பெயினுடன் போரை அறிவித்தது.

★ 1819-சிமோன் பொலிவார் பெரிய கொலம்பியாவின் சுதந்திரத்தை அறிவித்தான்.

★ 1834-அயர்லாந்தின் முதலாவது தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் டென்னசி, மிசிசிப்பி, கென்டக்கி ஆகிய மாநிலங்களில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

★ 1903-ரைட் சகோதரர்கள் வடக்கு கரொலைனாவில் முதன் முதலில் பன்னிரெண்டு வினாடிகள் என்ஜின் உந்தும் ஊர்தியில் பறந்தனர்.

★ 1926-லித்துவேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மக்களாட்சி அரசு கலைக்கப்பட்டு அண்டானஸ் சிமெத்தோனா ஆட்சியைப் பிடித்தார்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் வடக்கு போர்ணியோவில் இறங்கின.

★ 1947-இலங்கைத் தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டது.

★ 1961-இந்தியாவின் கோவாவை இந்தியா போர்த்துக்கலிடம் இருந்து கைப்பற்றியது.

★ 1967-அவுஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் விக்டோரியா மாநிலத்தில் போர்ட் கடலில் நீந்தும் போது காணாமல் போனார். பின்னர் இவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

★ 1970-போலந்தில் கிதீனியா நகரில் தொடரூந்துகளில் இருந்து இறங்கிய தொழிலாளர்களை நோக்கிச் சுட்டதில் பலர் உயிரிழந்தனர்.

★ 1973-ரோம் நகர விமான நிலையத்தை பாலஸ்தீனத் தீவிரவாதிகள் தாக்கியதில் 30 பயணிகள் உயிரிழந்தனர்.

★ 1983-லண்டனில் ஹரட்ஸ் பல்பொருள் அங்காடியில் குண்டு வெடித்ததில் 7 பேர் உயிரிழந்தனர்.

★ 1986-போதைப் பொருள் வர்த்தகத்துக்கெதிராகக் குரல் கொடுத்த கொலம்பியாவின் பத்திரிகையாளர் கில்லெர்மோ இசாசா சுட்டுப் கொல்லப்பட்டார்.

★ 1989- 25 ஆண்டுகளின் பின்னர் பிரேசிலில் முதலாவது பொதுத் தேர்தல் இடம்பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1908-வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, அமெரிக்க இயற்பியல் வேதியியலாளர் (இ.1980)

★ 1959-இரஞ்சகுமார், ஈழத்தின் சிறுகதையாசிரியர்

★ 1972-ஜோன் ஆபிரகாம், இந்திய நடிகர்

### இறப்புக்கள்

★ 1947-ஜொஹான்ஸ் நிக்கொலஸ், பிரோன் ஸ்ட்டெட் டென்மார்க் நாட்டு வேதியியலாளர் (பி.1879)

★ 1967-ஹரல்ட் ஹோல்ட், முன்னாள் அவுஸ்திலேயப் பிரதமர் (பி.1908)

★ 1975-சோ. இளமுருகனார், ஈழத்துப் புலவர் (பி.1908)

★ 1979-சேர் ஒலிவர் குணதிலக்க , இலங்கையின் மகா தேசாதிபதி

### சிறப்பு நாட்கள்

★ பூட்டான் -தேசிய தினம் (1907)


★ ஐக்கிய அமெரிக்கா-ரைட் சகோதரர்கள் தினம்

★ பாலியல் பெண் தொழிலாளர்களுக்கெதிரான வன்முறையை நிறுத்தும் அனைத்துலக தினம்.



★ 1975-இலங்கையின் ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்கவின் பிறந்த தினம்.


# அணை உடைந்தால்... இந்தியா உடையும்!



முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருக்கிறது என்ற பொய் முதன் முதலில் பத்திரிகையில் வெளியானது 1962-ல். மக்கள் அதைப் பொருட்படுத்தாதபோது, கேரள அரசு அதையே 1979-ல் பெரிய பொய்யாகச் சொன்னது இன்னொரு பத்திரிகை மூலம். அணையில் யானை புகும் அளவுக்கு வெடிப்புகள் ஏற்பட்டு இருப்பதாகவும், அணை எப்போது வேண்டுமானாலும் உடையலாம் என்றும், இலட்சக்கணக்கானோர் உயிரிழப்பார்கள் என்றும் சொன்னது. இந்த முறை மக்கள் அதை நம்பினார்கள்; கொந்தளித்தார்கள்; இன்று வரை அந்தப் பொய்யே ஆள்கிறது.

### உண்மை 1 : அணை, நோக்கங்கள், இலாபங்கள்!

இந்தியாவின் சராசரி மழை அளவு ஆயிரத்து 125 மி.மீ. ஆனால், இந்த மழை அளவானது ஒரே மாதிரியானது அல்ல. உதாரணமாக, ராஜஸ்தானில் ஒரு பகுதியில் 100 மி.மீ மழை பொழியும். மேகாலயாவின் ஒரு பகுதியில் 11ஆயிரத்து500 மி.மீ மழை பொழியும். இதே போலத்தான், நதி நீர்வளமும் ஒரு புறம் தேவை. இன்னொரு புறம் விரயம். இந்த இரண்டுக்குமான இடைவெளியைக் குறைப்பதே சிறந்த நீர் நிர்வாகம். ஆங்கிலேய அரசு முல்லைப் பெரியாறு அணையைக் கட்ட யோசித்தது இந்த அடிப்படையில்தான்.



தமிழகத்திற்கு நீரைக் கொண்டுவரும் குழாய்கள்




## தமிழகப் பார்வை

தமிழகத்தின் பாசனப்பரப்பு நீரின்றிக் காய்ந்த அந்த நாட்களில், கேரளத்தின் நீர்வளம் வீணாகிக் கொண்டு இருந்தது. இங்கு பயிர் விளைந்தால், அங்கு அது உணவாகும் என்ற பார்வை ஆங்கிலேய அரசிடம் இருந்தது. அன்றைக்கு அணை கட்டப்பட வேண்டிய இடம் சென்னை ராஜதானியிடம் இருந்தது. அணையைச்சுற்றி இருக்கும் பகுதிகள் திருவாங்கூர் சமஸ்தானத்திடம் இருந்தன. அந்தப் பகுதி களையும் ஆங்கிலேயர்களே எடுத்துக் கொண்டு, ஆறு இலட்ச ரூபாயும் அஞ்சியோ, தங்கச்சேரி, பாலம் ஆகிய மூன்று பகுதிகளையும் தந்தால் போதும் என்று கேட்டது திருவாங்கூர் சமஸ்தானம். ஆங்கிலேயர்கள் நினைத்திருந்தால், 999 ஆண்டு குத்தகைக்கு அந்த இடத்தை எடுத்துக் கொண்டதற்குப் பதிலாக இதைச் செய்திருக்கலாம். ஆனால், தமிழர்களும் மலையாளிகளும் சார்ந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். இன்றைக்கும் நாம் அவ்வாறே சார்ந்திருக்கிறோம்!

முல்லைப் பெரியாறு அணையில்-155 அடி நீர்தேக்கப்பட்டால், தென் தமிழகத்தில் 2.23 இலட்சம் ஏக்கர்கள் பாசனம் பெறும். 10இலட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள். இந்தப்பாசனப் பகுதி முழுவதும் நெல் விளைவிக்கப்படுவதாகக் கொண்டால், அதிகபட்சம் அதன் விளைச்சல் 10 இலட்சம் டன்களாக இருக்கலாம். கேரளத்தின் தேவை 50 இலட்சம் டன்கள். இதில், வெறும் 10 இலட்சம் டன்களை மட்டுமே கேரளத்தால் உற்பத்தி செய்ய முடிகிறது. எஞ்சிய தேவையில், பாதிக்கும் மேல் தமிழகத்தாலேயே பூர்த்திசெய்யப்படுகிறது. அதாவது, முல்லைப் பெரியாறு மூலம் பெறப்படும் விளைச்சலைப்போல, இரு மடங்கு நெல்லை நாம் அவர்களுக்குத் தருகிறோம்.

தவிர, காய் கனிகள், முட்டை, இறைச்சி என்று சகலமும் ஒவ்வொரு நாளும் 11 ஆயிரம் லொறிகளில் தமிழகத்தில் இருந்து செல்கின்றன!

தமிழகத்தின் பார்வையில் இருந்து பார்த்தால், இது ரூ. ஆயிரத்து 780 கோடி வணிகம். கேரளத்தின் பார்வையில் இருந்து பார்த்தால், அவர்களுக்கு உணவு அளிப்பவர்கள் தமிழர்கள். கேரளத்திடம் இந்தப் பார்வை இல்லாததே பிரச்சனையின் அடிநாதம்!

### உண்மை 2 : அணையின் வரலாறும் பாதுகாப்பும்!

பென்னிகுயில்க்கால் 1886-ல் தொடங்கி 1895ல் கட்டி முடிக்கப்பட்ட இந்த அணை, சுண்ணாம்புக் கலவையைக் கொண்டு கருங்கற்களால் கட்டப்பட்டது. நீர்அழுத்தம், அலைகளால் ஏற்படும் அழுத்தம், நில அதிர்வுகளால் ஏற்படும் தாக்கம் ஆகியவற்றை எதிர்கொள்ளும் உறுதிமிக்க புவிஈர்ப்பு விசை வடிவமைப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட அணை இது.

1979-ல் அணையின் பாதுகாப்பு விவகாரமான போது, கேரள மக்களின் அச்சத்தைப் போக்கும் நல்லெண்ண அடிப்படையில், அணையைப் பலப்படுத்த தமிழக அரசு ஒப்புக் கொண்டது. 1980-1994 கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வலுப்படுத்தும் பணிகளின் போது, 1200 அடி நீளம், 24 அடி அகலத்துக்கு கிட்டத்தட்ட 12ஆயிரம் டன் கான்கிரீட் கலவை அணையின் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டது. 120 டன் சக்தி கொண்ட எஃகுக் கம்பிகளால் அணை அடித்தளத்துடன் இறுக்கிக் கட்டப்பட்டது. மத்திய நீர்வள ஆணையத்தின் ஆலோசனைப்படி, புதிய வடிகால் மாடங்கள், மதகுகள் அமைக்கப்பட்டன. ஆக, பழைய அணையைப்போல மூன்று மடங்கு பலம் கூட்டப்பட்டது. இந்த உறுதித் தன்மை நிபுணர்களாலும் பல முறை ஆய்வுகளில் நிருபிக்கபட்டது. 1979-ல் தமிழகத்திடம் அணையைப் பலப்படுத்தச் சொன்னவர் அன்றைய மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவராக இருந்த கே.சி. தோமஸ். கேரளத்தைச் சேர்ந்த இவரே சமீபத்தில், "அணையின் பாதுகாப்பு தொடர்பான அச்சம் அர்த்த மற்றது" என்றார்.

"அணை இருக்கும் பகுதியில் சிறு நில அதிர்வுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஒரு வேளை 6 ரிக்டர் அளவுக்குப் பூகம்பம் ஏற்பட்டால், அணை உடையும். அணை உடைந்தால், 35 கி. மீ. கீழே உள்ள இடுக்கி அணைக்கு 45 நிமிடங்களில் வெள்ளம் வந்து சேரும். இடுக்கி அணையையும் இடையில் உள்ள சிறு அணைகளையும் அது உடைக்கும். இடுக்கி, கோட்டயம், ஆலப்புழை, எர்ணாகுளம் பகுதிகள் மூழ்கும். 35 இலட்சம் பேர் உயிரிழப்பர். எனவே, பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 120 அடிகளாகக் குறைக்க வேண்டும். இந்த அணையை இடித்து விட்டு, புதிய அணைகட்ட அனுமதிக்க வேண்டும்!" கேரளத்தின் வாதம் இது தான்.

முல்லைப் பெரியாறு அணை அமைந்து இருக்கும் இடம், கேரளம் அஞ்சுவது போல பெரிய நில நடுக்கங்கள் ஏற்படும் பகுதியல்ல. ஒரு வாதத்திற்காக அணை உடைவதாகவே கொண்டாலும், அணையிலிருந்து வெளியேறும் வெள்ளம் இடுக்கி அணையையே வந்தடையும். இடுக்கி அணை முல்லைப் பெரியாறு அணையைப்போல ஏழு மடங்கு பெரியது. இதற்கு இடையே குமிளி, ஏலப்பாரா பகுதிகள் மட்டுமே உள்ளன. அவையும் அணை இருக்கும் மட்டத்தில் இருந்து முறையே 460ஆயிரத்து 960 அடிகள் உயரத்தில் உள்ளன. வெள்ளம் எப்படி மூழ்கடிக்கும்?

முல்லைப் பெரியாற்றில் கிடைக்கும்மொத்த நீரின் அளவு 4ஆயிரத்து867 மில்லியன் கன மீட்டர். இதில் கேரளம் பயன்படுத்திக் கொள்வது 2ஆயிரத்து 254 மில்லியன் கன மீட்டர். கடலில் கலப்பது 2ஆயிரத்து313 மில்லியன் கனமீட்டர். தமிழகத்தின் பங்கு- அணையின் நீர்மட்டம் 152 அடியாக இருந்தாலும்- 126 மில்லியன் கன மீட்டர்தான். (சுருக்கமாகச் சொன்னால், சற்றே பெரிய 4 குழாய்களில் தமிழகத்துக்குத் தண்ணீர் வருகிறது!) எனில், கேரளம் ஏன் எதிர்க்கிறது?

தங்களுடைய இடத்திலுள்ள ஓர் அணையின் பயனை தமிழகம் அனுபவிப்பதைச் சகித்துக்கொள்ள முடியாத காழ்ப்பு உணர்வே கேரளத்தின் பிரச்சினை. தண்ணீர்மூலம் உருவாகும் மின்சாரமும் தொழில் வளர்ச்சியுமே அதன் உள்நோக்கம்.

புனல் மின்சார உற்பத்திக்கான கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதி இது. கேரளத்தின் தொழில் வளர்ச்சியை மனதில் கொண்டு, நாட்டின் பெரிய நீர்மின் உற்பத்தி நிலையத்தை இங்கு நிர்ணயிப்பது கேரள அரசின் நெடுநாள் கனவு. இடுக்கி அணைகூட அந்தக் கனவின் வெளிப்பாடுதான். நீர்வரத்தை அதிகமாகக் கணக்கிட்டு இந்த அணையைக் கட்டிவிட்டது கேரளம். 780 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இலக்கோடு கட்டப்பட்ட இந்த மின் நிலையம், முழு அளவில் இயங்க விநாடிக்கு 10 ஆயிரம் கன அடி நீர் பாய வேண்டும். அது சாத்தியப்படவில்லை. முல்லைப் பெரியாறு அணை இல்லையென்றால், தமிழகத்திற்கு நீர் அளிக்க வேண்டிய தேவையில்லையென்றால், அது சாத்தியமாகும் என்று கேரளம் நினைக்கின்றது. மேலும் சில மின் உற்பத்தித் திட்டங்களை அது மனதில் வைத்திருக்கிறது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 155 அடியாக இருந்தால், அதன் நீர்ப்பரப்பு 8ஆயிரத்து 591 ஏக்கர். 136 அடியாக இருக்கும்போது அதன் நீர்பரப்பு 4ஆயிரத்து 678 ஏக்கர். தமிழகம் 8ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறது. ஆனால், அணையைப் பலப்படுத்தும் காலகட்டத்திலும் அதற்குப் பின்னரும் கேரளம் கொடுத்த தொடர் அழுத்தத்தின் காரணமாக, அணையில் 136 அடிவரை மட்டுமே நீரைத் தேக்கிவைக்கும் நிலை ஏற்பட்டது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட கேரளத் தொழிலதிபர்கள் பலர், எஞ்சிய இடத்தை ஆக்கிரமித்தனர். ஏராளமான விடுதிகள், ரிசார்ட்டுக்கள் கட்டப்பட்டன. சுற்றுலா அங்கு பெரும் தொழிலாக வளர்ந்துள்ளது. நீர் மட்டம் உயர்த்தப்பட்டால், இந்தக் கட்டமைப்புக்கள் காணாமல் போகும். கேரள அரசை இந்தப் பின்னணியும் இயக்குகிறது.


இவை தவிர, எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது விவகாரம் பெரிதாக்கப்படக் காரணம், கேரளத்தின் இன்றைய அரசியல் நிலை. வெறும்3 இடங்கள் பெரும்பான்மையில் சட்டசபையில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் அரசு, ஓர் இடைத் தேர்தலை எதிர்கொள்கிறது. இந்தத்தேர்தல் முடிவு காங்கிரசுக்கு எதிராக அமைந்தால், ஆட்சி பறிபோகும் சூழல் உருவாகும். முல்லைப் பெரியாறு அணை அரசியல் சூதாட்டத்தின் உள்நோக்கங்களில் இதுவும் ஒன்று.

காவிரியில் தனக்குரிய பாரம்பரிய உரிமையை நிலைநாட்ட 17 ஆண்டுகள் வழக்காடியது தமிழகம். வழக்கறிஞர்கள் கட்டணமாக மட்டும் ஆயிரத்து 200 கோடி ரூபாயைச் செலவிட்டது. இறுதித் தீர்ப்பு வந்தது. ஆனால், இன்னமும் தமிழகத்துக்கு நியாயமாகச் சேரவேண்டிய நீரைப்பெற முடியவில்லை.

முல்லைப் பெரியாற்றில், அணை பலமாக இருந்தபோதே, அணையைப்பலப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டதை ஏற்றுக்கொண்டது தமிழகம். அணையைப் பலப்படுத்தும் வரை நீர்மட்டத்தைக் குறைக்கவும் ஒப்புக்கொண்டது. இதனால், தமிழகத்தில் 38ஆயிரம் ஏக்கர் நிலம் தரிசானது. 86ஆயிரம் ஏக்கர் நிலம் ஒரு போகச் சாகுபடியானது. பாசனப்பரப்புக் குறைந்ததாலும் மின் உற்பத்தி குறைந்ததாலும் மட்டும் 4ஆயிரத்து 200 கோடி இழப்பு ஏற்பட்டது. ஆனால், தமிழகம் இவ்வளவு இழப்புக்களையும் சந்தித்து அணையைப் பலப்படுத்திய பின்னர், அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த உச்சநீதிமன்றம் உத்தரவு இட்டபோது, கேரளம் அதை ஏற்க மறுத்தது. சட்ட சபையில் புதிய சட்டம் இயற்றி, அணையின் நீர்மட்டத்தை 136 அடியாக நிர்ணயித்தது. "உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை எனில், உச்சநீதிமன்றத்தின் புனிதத்தன்மை என்னவாகும்?" என்று கேள்வி எழுப்பியது உச்ச நீதிமன்றம். ஆனாலும் இன்றுவரை யாராலும் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தண்ணீரைப் பெற்றுத்தர முடியவில்லை. கடைசியாக, அணையையும் தமிழகம் இழக்கப்போகிறதா?

காவிரியோ, முல்லைப் பெரியாறோ வெறும் நதிகள் மட்டும் அல்ல. இந்தியாவில் தேசிய ஒருமைப்பாடு என்ற சொல்லுக்கு நேரடியான அர்த்தம் கொடுப்பவை இவைதான். கர்நாடகமோ, கேரளமோ தாக்குதல் நடத்துவது தமிழகத்தின் மீது அல்ல. நம்முடைய தேசிய ஒருமைப்பாட்டின் மீதுதான்.

ஒரு மாதமாக இரு மாநிலங்கள் கொந்தளிக்கின்றன. அப்பாவிக் கூலித்தொழிலாளிகள் தாக்கப்படுகின்றனர். பக்தர்கள் விரட்டப்படுகின்றனர். பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். வாகனங்கள் அடித்து நொருக்கப்படுகின்றன. கடைகள் சூறையாடப்படுகின்றன. மாநில உணர்வு எங்கும் வியாபித்துக் கொப்பளிக்கிறது. வன்முறை நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறது. பிரதமரே நீங்கள் என்ன செய்கிறீர்கள். தமிழர்களுக்கு எங்கும் பிரச்சினைதான்.



# 'உள்ளக இறைமை' என்பதன் பொருள் (Internal Sovereignty)



பேராசிரியர்.இரா.சிவச்சந்திரன்

ஒரு சமூகத்தின் நல்லாளுகை தொடர்பாக எழும் சவால்களை எதிர்கொள்ள இறைமை என்கிற கோட்பாட்டை வலுவானதொரு கருவியாக பயன்படுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் இறைமை என்பதன் பொருள் என்ன என்பதனை விளங்கி, ஒரு சமூகத்தின் ஆளுகை நடைமுறையை எவ்வாறு ஒழுங்கு செய்து கொள்ள முடியும், அதிலும் குறிப்பாக பல்வேறு ஆளுகை அமைப்புகளுக்கு இடையில் அதிகார பரவலாக்கல் ஒழுங்குகளை எவ்வாறு வகுத்துக் கொள்ள முடியும் என்பதனை முடிவு செய்வதில் பலர் தெளிவின்றி உள்ளனர். இறைமையின் பல்வேறு பண்புகளைப் பற்றி அறிந்திருத்தல் இப்பணியினை இலகுவாக அமுல்செய்ய துணை புரியும்.

தற்கால அரசியல் விஞ்ஞானத்தில் கூறப்படுகின்ற இறைமைக் கோட்பாடு ஒரு மேலைத்தேய கோட்பாடாகும். எமது நீதி நூல்களிலும் இலக்கியங்களிலும் கூறப்படும் இறைமை வேறுபொருள் கொண்டவை. இறைமை என்ற கருத்து சோக்கிரட்டீஸ் காலத்தில் தோன்றிய மத்திய கால அரசுகளில் வலுப் பெற்று நவீன காலத்தில் மேலும் விரிவடைந்துள்ளது.

குறிப்பாக பிரித்தானிய அரசனின் அதிகாரங்கள் பிரபுகளுக்கு பகிரப்படும் போதும் பாராளுமன்றத்தை வந்தடைந்த போதும் பின்னர் பிரெஞ்சுப் புரட்சியின் போதும் அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் போதும் அமெரிக்க சுதந்திரத்தின் போதும் இக்கோட்பாடு மேலும் பல விளக்கத்தைப் பெற்றது. இதில் முக்கியமான விடயம் யாதெனில் இக்கோட்பாடு பேசப்படத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை சகலராலும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஒரு வரைவிலக்கணத்தை கொண்டிருக்கவில்லை.

ஒவ்வொரு வரைவிலக்கணமும் இன்னொன்றை விட ஏதோ ஒரு வகையில் வேறானதாக அமைந்துள்ளது.

இதற்கான காரணம், இறைமை என்பது ஒவ்வொரு ஆட்சி சூழலுக்கும் ஏற்றாற்போல் வெவ்வேறு பண்புகளைக் கொண்டிருப்பதாகவும் வெஸ்பாலிய உடன்படிக்கையில் கருதப்பட்ட இறைமை கோட்பாட்டை விட 14 ஆம் லூயி கூறிய 'நானே அரசு' என்ற கருத்தில் இருந்து பிறக்கும் இறைமைக்கோட்பாடு வித்தியாசமானதாகும். அதேபோல பிரித்தானிய அரசின் இறைமை பிரெஞ்சுப் புரட்சியின் பின்வந்த இறைமைக் கருத்துக்களை விட வித்தியாசமானது. ஐக்கிய அமெரிக்க அரசுகளில் இறைமை என்ற கருத்து ஐரோப்பிய ஜூனியனில் தற்போது பரிணமித்துள்ள ஒரு இறைமைக் கருத்தை விட வேறானது. சர்வதேச சட்டங்களுக்கும் முறைமைகளுக்கும் இணங்கியொழுகும் போது நாடுகளில் இறைமை குடியரசுகளின் கூட்டு ஆட்சியொன்றில் பேசப்படும் இறைமையை விட வித்தியாசமானதாகும்.

இறைமையென்பது குறிப்பிட்ட ஒரு ஆட்புல எல்லைக்குள் அந்நாட்டு அரசாங்கத்திற்கு சுதந்திரமாக தனது அதிகாரத்தை பிரயோகிக்கும் மேலான மையான தன்மை என்று கூறலாம். இது அரசியல் அபிலாஷைகளின் அடிப்படையில் சட்டத்தினை ஆக்கவும் ஆட்சி செய்யவும் உள்ள ஆற்றலைக் குறிக்கும். மக்களின் நலன்களைப் பேணும் அக்கறையுள்ள உண்மையான ஆட்சியை செய்வதனால் இந்த இறைமை ஆற்றல் இருத்தல் வேண்டும். இறைமை பூரணமானது, எந்த சட்டங்களாலும் பிரிக்கப்படமுடியாது, பராதீனப்படுத்த முடியாதது என்பன போன்ற கருத்துக்கள் முன்னர் இருந்தன. ஆனால் நவீன காலத்திற்கு பின்னர் (Post modern) அரசாங்கம் என்ற கருத்தில் இருந்து விலகி ஆளுகை (Governance) பற்றிய கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றதோடு இறைமை பற்றிய கருத்துக்களும் மாறிவிட்டன.

சாதாரண மொழியில் கூறுவதானால் வேறு எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கத்திற்கும் கட்டுப்படாது பூரணமாக செயற்படும் அரசாங்கமாக ஒன்று அமையுமானால் அங்கு வெளிநாட்டு இறைமை (External Sovereignty) உள்ளது என்று பொருளாகின்றது. ஒரு நாட்டின் தலைமைத்துவ அதிகாரம் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடம் பகிரப்படும் போது அங்கு பகிரப்பட்ட இறைமை (Shared Sovereignty) உண்டென்று கூறலாம். சமஷ்டி ஆட்சிமுறைமையிலுள்ள பிராந்திய அரசுகள் (Federal system of Government) தேசிய அரசாங்கத்திற்கு புறம்பான அதிகாரங்களை கொண்டிருப்பதால் இதுவும் வேறு ஒரு இறைமையை குறிக்கும். இதைவிட அரசுகளின் கூட்டில் (Confederation) அதாவது அந்த அமைப்பிலிருந்து விலகிச் செல்லும் உரிமையுடன் கூடிய கூட்டு ஆட்சியிலுள்ள அங்கத்துவ நாடுகளில் அல்லது குடியரசுகளில் உள்ள இறைமை இன்னும் வேறானதாகும்.

பொதுவாக உள்ளக இறைமை (Internal Sovereignty) என்பது உள்ளூர் விவகாரங்களை செயற்படுத்தும் முறையைக் குறிக்கும். முக்கியமாக உள்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் உறுதியாக நிலைநாட்ட உள்ளக இறைமை தேவை. பலமாக உள்ளக இறைமை இருந்தால் தான் பல்வேறு சமூகங்களின் மத்தியில் ஒழுங்குகளைப் பேணவும் வெவ்வேறு சமூகக் குழுக்களை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கவும் முடியும்.

பலமான உள்ளக இறைமை இருந்தால் தான் ஒப்பந்தங்களையும் சட்டங்களையும் அமுல்செய்ய முடியும். குழப்பங்களையும் கலகங்களையும் அடக்குவதற்கு நாட்டின் தலைமைத்துவத்திற்கு இது தத்துவம் வழங்குகிறது. உறுதியான உள்ளக இறைமை சட்ட ஆட்சியை உறுதிப்படுத்தும் ஆற்றலாக வெளிப்படும். உள்ளூரில் உள்ள பொலிஸ், இராணுவம், துணைப்படைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தலாம். அவற்றுடன் இணக்கங்கண்ட விடயங்களின் படி அவர்களை இணங்கி, ஒழுங்காக வைப்பதற்கான ஆற்றலாகவும் இந்த உள்ளக இறைமை இருக்கும்.

றெனிக்கி (Renicke,1998) என்ற அறிஞர் உள்ளக இறைமை என்பது ஒரு சமூகத்தில் பொதுக் கொள்கையை உருவாக்கி இதனை அமுலாக்கி முகாமைசெய்வதற்கு அரசாங்கத்திற்கு உள்ள ஆற்றலைக்குறிக்கும் என்று கூறியதோடு ஒரு நாட்டின் உள்ளக இறைமைக்கான அச்சுறுத்தல் என்பது அங்கு ஒரு பொதுக்கொள்கையை அமுலாக்கி முகாமை செய்வதற்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தலையே கருதும் என்றும் கூறினார். பொதுவான இன, கலாசார, வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சமூகங்கள் சுயநிர்ணய உரிமைகோரி தமக்குரிய ஒரு பிரதேசத்தில் தமது இறைமையை நிறுவமுயலும் சந்தர்ப்பங்களில் (Nation States) அப்பிரதேசத்தில் பூரண இறைமையுள்ள (Absolute Sovereignty) நாடுகளாக இல்லாத வகையில் சுய ஆட்சி பிரதேசங்களாக (Autonomous Areas) மாற முயலும் போது இவ்வுள்ளக இறைமைத்தத்துவம் கூடிய அளவில் உபயோகிக்கப்படுகிறது. இலங்கையின் இதன்பொருத்தப்பாடு பற்றி சிந்திக்கமுடியும்.

எனினும் உள்ளக இறைமை என்பது பொதுவாக பிரஜைகளுக்கும் அரசுக்கும் இடையிலுள்ள உறவைக் குறிப்பதாக இருக்கும். மக்கள்மீது எந்த அளவிற்கு அதிகாரம் அரசாங்கத்துக்கு இருக்கிறது என்ற வினாவிற்கு விடையாக இந்த உள்ளக இறைமையைக் கூறலாம். இது மத்திய அரசுக்கும் பிராந்தியம் அல்லது சமஸ்டி அரசுகள் மீதும் உள்ளமேலாதிக்கத் தன்மையைக் குறிக்கும்.

## நவீன காலத்திற்குப் பின் இறைமையின் போக்கு

நவீன காலத்திற்குப் பின் (Post modern period)குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மனித குலத்தில் ஏற்பட்ட அறிவியல், தகவல் தொடர்பு, விஞ்ஞான மாற்றங்கள் அரசியல் சித்தாந்தங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. எந்தநாடும் சர்வதேச சட்டங்களுக்கும் முறைமைகட்கும் நியமங்களுக்கும் கட்டுப்பட்டேயாக வேண்டும். எனவே இன்றைய இறைமை என்பது பின்னப்பட்ட சர்வதேச இறைமையாகிவிட்டது. (Complex Sovereignty). தற்போது அரசாங்கத்தைவிட ஆளுகை நடைமுறைக்கே முதலிடம் ஏற்பட்டுள்ளது.

புதிய கருத்துக்களின்படி ஆளுகைக்கு அரசாங்கம் ஏகபோக உரிமை (Monopoly) கொண்டாட முடியாது. ஆளுகையில் தனியார்துறை, சிவில் சமூகம், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரும் பங்காளிகளாக ஆகிவிட்டனர். மத்தியிலுள்ள ஒரு அரசாங்கம் மட்டும்தான் ஆட்சிக்குப் பொறுப்பானது என்று இல்லாமல் அதிகாரங்கள் வேறுபடி நிலை ஆளுகை அமைப்புகளுக்கு (Tiers of Governance strutures) பகிரப்பட்டுவிட்டன.புதிய ஆளுகை அமைப்புகளுக்குரிய அதிகாரப்பகிர்வில் அண்மித்த தன்மை (Proximity), சுயாதீனம் (Autonomy), மத்திய அரசாங்கத்தின் ஆகக்குறைந்த தலையீடு(Subsidiarity) என்ற தத்துவங்கள் அடிப்படையாக அமைந்துவிட்டன. எனவே இறைமை குறுக்காகவும் நெடுக்காகவும் பிரிக்கப்பட்டுவிட்டது என்றும் பராதீனப்படுத்தப்பட்டுவிட்டது என்றும் பகிரப்பட்டுவிட்டது என்றுமே கூறவேண்டும்.

ஆனால் உள்ளக இறைமை என்ற கோட்பாட்டை எவ்வாறு ஒரு வலுவான கருவியாகப் பயன்படுத்தவேண்டும் என்று நோக்குகையில் வைன் டெலோறியா (Dr.Vine Deloria) என்ற அறிஞர் உள்ளக இறைமையானது அமெரிக்க பழங்குடிகளின் சகல வாழ்வியல் கூறுகளிலும் பூரந்து நிற்கின்றது என்றும் உதாரணமாக பழங்குடிகள் தமக்கான ஒரு பொலிஸ் படையை வைத்திருக்கவும் மற்றும் தமக்குரிய சிறுவர் நலச் சட்டத்தை ஆக்கி அமுல்படுத்தும் அதிகாரத்தையும் அது அவர்களுக்கு வழங்கியுள்ளது என்கிறார். மேலாதிக்க ஆட்சி முறைகளின் கீழ் சீரழிந்து போகின்ற கலாசாரப் பண்பாட்டு, மனித விழுமியங்களைக் காக்க விளையும் ஒரு சமூகத்திற்கு இக்கோட்பாடு சிறந்த ஒரு கருவியென்றே கூறவேண்டும்.

ரல்ரான் எதிர் மாயாஸ் என்கின்ற வழக்கில் அமெரிக்க உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு உள்ளக இறைமைக் கோட்பாட்டின் பிரயோக ரீதியான உபயோகத்தை வெளிக்காட்டுகிறது. இந்த வழக்கானது செறொக்கீ பிரதேச நியாயவாதிகளால் (Cherokee jury) குற்றவாளியெனத் தீர்க்கப்பட்ட ஒரு கொலை வழக்கின் மேன்முறையீடாகும்.

இந்த வழக்கு முதலில் அமெரிக்க நீதி விசாரணைமுறையின் கீழ் உள்ள நியாயவாதிகள் குழுவை விடச்சிறிய ஒரு குழுவினால் விசாரிக்கப்பட்டிருந்தது. எனினும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் பின்வருமாறு கூறியது. செறோகீ பழங்குடிப் பிரதேசம் தன்னுடைய உள்ளூர் விவகாரங்களில் பாரம்பரியமாக தன்னிடம் எப்போதுமே இருந்த அரசியல் அதிகாரத்தைப் பிரயோகித்துள்ளது.

உண்மையில் அவர்களது இந்த அதிகாரம் அமெரிக்க அரசியல் திட்டம் தயாரிப்பதற்கு முன்பே அவர்களிடம் இருந்துவந்துள்ளது என்றும் கூறியது. இதனுடைய கருத்து யாதெனில் அமெரிக்க பழங்குடிகள் தமது அதிகாரத்தை இவ்வகையில் பிரயோகிக்கமுடியும்.

தங்களது உள்ளக இறைமையைப் பாதுகாக்க அவர்களுக்கு உரிமை உண்டு என வைன் டெலோறியா வாதிடுகின்றார்.

எனவே உரிமைகளைப் பாதுகாக்க விளையும் சமூகங்கள் அவர்களுக்கு மட்டுமேயான அதிகாரங்களை (Prerogative) ஒட்டுமொத்தமாக பாதுகாக்க இந்தத் தத்துவம் உதவி செய்யும். இது அலங்காரமான அதிகாரங்களையன்றி அடிப்படையானதும் விட்டுக்கொடுக்க முடியாததுமான தத்துவங்களைத் தம்மிடம் தக்கவைக்க உதவும் கோட்பாடாகும்.

இது இலங்கைத் தமிழர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவல்ல தகவல் ஆகும். இதன்படி இலங்கை தமிழ் நிலத்தில் தேசவழமைச்சட்டம், மட்டக்களப்பில் நிலவும் முக்குவ சட்டம் என்பன என்றும் எவராலும் மாற்றமுடியாத உள்ளக இறைமை கொண்ட சட்டங்கள் என்று கருத முடியும். இலங்கை தமிழர்களது தேசியம்,கலை பண்பாட்டு, சமய நம்பிக்கைகளுடன் இணைந்த வாழ்வியல் இயக்கமும் உள்ளக இறைமை கொண்டவைகளே. ✳

# வடக்கில் வசந்தம் வீசவில்லை சூறாவளிதான் வீசுகின்றது

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

**வடக்கின் வசந்தம் என்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இன்று வடக்கின் துன்பமாக மாறி விட்டதாக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். மின்சாரத்தை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து மீள்குடியேற்றப் பிரதேசங்களில் நாட்டப்பட்ட கம்பங்கள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்வலு எரிசக்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

வடக்கின் வசந்தம் எனுமொரு திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்தது. இதன் மூலம் எமது மக்களுக்கு தென்றல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு பதிலாக இன்று சூறாவளிதான் வீசிக்கொண்டிருக்கின்றது.

மின்சாரத்தை பெற்றுத் தரப்போவதாக கூறி மின்கம்பங்கள் நாட்டப்பட்டன. ஆனால் அங்கு மின்கம்பிகள் இணைக்கப்படவில்லை.

இந்த வடக்கின் வசந்தம் இடையில் நிறுத்தப்பட்டமைக்கு சீனாவுடனான ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள குளறுபடிகளே காரணமாகும்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் முழு நாட்டிற்கும் மின்சாரத்தை பெற்றுக் கொடுக்க போவதாக மகிந்த சிந்தனை கூறுகின்றது. எனினும் வடக்கை பொறுத்தவரையில் அரசாங்கத்தின் இத்திட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில் அது எவ்வாறாக சாத்தியமாகப் போகின்றது.

மீள்குடியேற்றிவிட்டதாகவும் வசதிகள் செய்து கொடுத்திருப்பதாகவும் சர்வதேசத்துக்கு கூறப்படுகின்றது. எனினும் மீள்குடியேற்றம் என்ற பேரில் மக்கள் குறித்த பகுதிகளுக்கு கொண்டு போய் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளை எடுத்துரைத்தால் அரசாங்கம் எம்மீது குறை காணுகின்றது. எமது மக்களின் பிரச்சினைகளை, குறைபாடுகளை வெளிக்கொணரும் பொறுப்பில் நாம் இருக்கின்றோம்.

மீள் குடியேற்றப் பகுதிகளில் எமது மக்கள் இன்றும் இருளில்தான் இருக்கின்றனர். அவர்களுக்கு மின்சார வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படுவதில்லை. தேர்தல் காலங்களில் வருகின்ற அரசியல்வாதிகள் வாக்குகளைக் குறிவைத்து வாக்குறுதிகள் வழங்கி மின்சாரம் பெற்றுத்தருவதாக மின்கம்பங்களையும் நாட்டிச் சென்றனர். ஆனால் இன்று வரையில் மின்சாரம் வழங்கப்படாத நிலையில் அந்தக் கம்பங்கள் தற்போது பழுதடைந்து காணப்படுகின்றன.

எமது மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கின்றனர். மின்சாரம் வழங்கப்பட்டுள்ள நகர்ப்புறங்களில் நாளொன்றுக்கு 5 தடவைகள் மின் தடை ஏற்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் நாள் முழுவதும் இந்த தடை நீடிக்கின்றது. இதனால் மாணவர்கள் முதல் சகலருக்கும் பிரச்சினை ஏற்படுகின்றன. மொத்தத்தில் வடக்கின் வசந்தம் இன்று வடக்கின் துன்பமாக மாறியிருக்கின்றது. எமது மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (அ-2)

# ஜே.வி.பி.யின் ஆர்ப்பாட்டத்திற்கும் மின்சாரம் வழங்குவோம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

எந்தவொரு நடவடிக்கைக்கும் பணத்தை செலுத்தி மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடியும். பணம் செலுத்தினால் ஜே.வி.பி. ஆர்பாட்டத்திற்கும் மின்சாரத்தை வழங்குவோம் என்று மின்வலு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்வலு அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்ட ஜனநாயக தேசிய கூட்டணியின் எம்.பி.யான சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனதுரையை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுனில் ஹந்துன்நெத்தி கொழும்பில் ஆரம்பமாகிய கார் ஓட்டப்பந்தயத்திற்கு மின்சாரம் வழங்குவது யார்? இலங்கை மின்சார சபையா? இன்றேல் ஆசியாவின் ஆச்சரியமா அதற்கான செலவுக்கு யார் பொறுப்பு என்று வினவினார்.

யாரும் பணம் கொடுத்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் கொடுத்தால் மின்சாரத்தை வழங்குவதற்கு நாம் எந்த நேரத்திலும் தயாராவே இருக்கின்றோம்.

ஜே.வி.பி.யினால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஒளியூட்டுவதற்கும் நாம் தயார். பணம் கொடுத்தால் மின்சாரம் வழங்குவோம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (அ-2)

# தகவல் தொழில்நுட்பம் சார் அறிவு மிகவும் குறைந்தளவில்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கணனி அறிவு தொடர்பில் திருப்தி அடைய முடியாது என பெற்றோலியவள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வியறிவு மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்ப அறிவு முக்கிய இடத்தை வகிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் ஒரு நாட்டின் கல்வியறிவு மக்களின் தகவல் தொழில்நுட்ப அறிவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் கல்வியறிவு 93 வீதமாகக் காணப்பட்டபோதிலும் த்கவல் தொழில்நுட்பம் சார் அறிவு மிகவும் குறைந்தளவில் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் தகவல் தொழில்நுட்பத்துறை பாரியளவு வளர்ச்சியடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் நாட்டின் தகவல் தொழில்நுட்ப அறிவினை 75 வீதமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டில் நாட்டின் தகவல் தொழில்நுட்ப அறிவு ஐந்து வீதமாகக் காணப்பட்டது. (அ-2)

# கடற்படையினரால் இந்திய மீனவர்கள் ஐவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர்

இலங்கை கடற்படையினர் ஐந்து இந்திய மீனவர்களை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களில் இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை கைது செய்த இரண்டாவது சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.

கச்சதீவுக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களின் 711. படகுகளை இலங்கை கடற்படையினர் துரத்தியதாக குறிப்பிடப்படுகின்றது. மூன்று மீன்படி படகுகளை கடற்படையினர் சுற்றி வளைத்ததாகவும் இதில் இரண்டு படகுகள் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எஞ்சிய ஒரு படகில் இருந்த ஐந்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். கடந்த நவம்பர் மாதமும் ஐந்து இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கரு ஜயசூரியவுக்கு கட்சித் தலைமைப்பதவி வழங்கப்பட வேண்டும்-மாநாயக்கதேரர்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பு கரு ஜயசூரியவிற்கு வழங்கப்பட வேண்டுமென மாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்காக இரு குழுக்கள் போட்டியிடுவது உசிதமாகாது என தெரிவித்துள்ளார். வலுவான ஓர் எதிர்க்கட்சியை உருவாக்கும் நோக்கத்திற்கு இவ்வாறான போட்டிபாதகநிலைமையை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டிற்கு சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளவும் நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டவும் அரிய பங்களிப்பை வழங்கிய பழம் பெரும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி திகழ்கின்றது என மாநாயக்கதேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கரு ஜயசூரியவிற்கு கட்சித்தலைமைப் பொறுப்பு வழங்கவேண்டுமென வலியுறுத்தி மாநாயக்க தேரர்கள், தற்போதைய கட்சித் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். கட்சி, எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ரணில் விக்ரமசிங்க வகிக்கும் அதேவேளை கட்சித் தலைமைப் பொறுப்பை கரு ஜயசூரியவிடம் ஒப்படைப்பது சாலச் சிறந்த தீர்மானமாக அமையும் என தெரிவித்துள்ளனர்.

அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித, மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அமரபுர பீடாதிபதி தவுல்தென ஞான திஸ்ஸகர மற்றும் ராமன்ய நிக்காயவின் பீடாதிபதி வேவல்தெனியே மேதாலங்காரதேரர் ஆகியோர் கூட்டாக இணைந்து கடிதம் ஊடாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (அ-2)

# ஆயுதங்கள் சிலவற்றுடன் சந்தேகநபர் கைது

(கொழும்பு)

வென்னப்புவ பிரதேசத்தில் ஆயுதங்கள் சிலவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு உடையவர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொஸ்வத்தை பொலிசார் இந்த சுற்றி வளைப்பினை மேற்கொண்டுள்ளனர். மைக்ரோ வகையைச் சேர்ந்த துப்பாக்கியொன்றும் இரண்டு மெகசின் துப்பாக்கிகளும் 43 ரவைகள் மற்றும் சைக்கிள் ஒன்றும் இதன்போது கைப்பற்றப்பட்டதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

அத்துடன் குறித்த சந்தேக நபரிடமிருந்து தங்கநகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிசார் குறிப்பிட்டனர்.. (அ-2)

# எவரும் எவருக்கும் அடிமையில்லை என்ற அடிப்படையில் தீர்வு வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சிங்கள மக்களை திட்டித் தீர்ப்பதனால் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது எனவும் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டு சிங்களவர்கள் ஒருபோதும் தீர்வு வழங்க மாட்டார்கள் என குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போது அமைச்சர் தேவானந்தா மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்துள்ளார்.

தீர்வுத் திட்டங்கள் எதனையும் முன்வைக்காது வெறுமனே கோசங்களை எழுப்புவதில் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்காது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல தமிழ் அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டும். இம் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய பல சந்தர்ப்பங்கள் நழுவவிடப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே இன்று மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

காலத்துக்கு காலம் நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வினை வழங்க தயக்கம் காட்டினர்.

அதன் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் தமிழ்த் தலைவர்கள் பொறுப்புணர்ச்சியின்றி செயற்பட்டனர்.

கடந்த கால தவறுகளை மறந்து தமிழ் மக்களின் நலனுக்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

நான் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவன். போராட்டங்களில் ஈடுபட்டவன் என்ற ரீதியில் அழிவுகளுக்கு நானும் ஓர் பொறுப்பாளி.

இனவாத சிந்தனைகளை முதன்மைப்படுத்தாது தமிழ் மக்களின் நலனுக்காக சாதூரியமான தீர்மானங்களை எடுக்க வேண்டும். எவரும் எவருக்கும் அடிமையில்லை என்பதன் அடிப்படையில் தீர்வு அமைய வேண்டும். முதலில் இலங்கை- இந்திய உடன்படிக்கை அமுல்படுத்தப்பட வேண்டும்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் கிரமமான முறையில் அமுல்படுத்த முடியும். இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டதன் பின்னர் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்த முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மின்தடைப்படும்

வீதியகலிப்பு பணிகளுக்கு உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும். கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடி பகுதி, பாற்பண்ணைப் பகுதி. திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலேயே மின்சாரம் தடைப்படும் என யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

## ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமைதோறும் ஆன்மீக நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதில் நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசைக்கு பின்னர் உள்ளம் பெரும் கோயில் என்னும் விடயம் பற்றி இரா.கேதீசன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (அ-38)

# ஜனாதிபதியின் மகன் நாமல் சட்டத்தரணியாக பதவியேற்பு



பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இவரது சத்தியப்பிரமாணத்தின் போது மேலும் 250 பேர் சட்டத்தரணிகளாக பதவியேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கை மின்சாரசபை இவ்வாண்டில் நட்டத்தை ஈட்டுவதற்கான காரணம் என்ன?

## கபீர் ஹாசிம் எம்.பி. சபையில் கேள்வி

தேவையான அனைத்து வளங்களும் உள் நாட்டில் நிறைந்து காணப்படுகின்ற நிலையில் நுரைச்சோலை அனல்மின் திட்டத்துக்கான வளங்கள் அனைத்தும் சீனாவுடையதாகவே இருந்தது எனத் தெரிவித்த ஐ.தே.க. எம்.பி. கபீர் ஹாசிம் இலங்கையின் வளமாக நாய்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்வலு எரிசக்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கபீர் ஹாசிம் எம்.பி. இங்கு மேலும் கூறுகையில், கடந்த இரண்டு தசாப்த காலங்களில் மின்சாரத்தின் தேவை அதிகரித்திருக்கின்றமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்றா கும். எனினும் நுரைச்சோலை மின் உற்பத்தித் திட்டதை தவிர்ந்த வேறு எந்தவொரு நீண்டகால மத்திய தர மின் திட்டங்களையும் இன்றைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்க முடியாது போயுள்ளது.

மேல் கொத்மலை மின் திட்டத்தை எடுத்துக் கொண்டால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும்.

1978 முதல் 1994 ஆம் ஆண்டு வரையிலான ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் இலங்கை மின்சாரசபை இலாப மீட்டும் நிறுவனமாகவே இருந்தது. எனினும் 1996 ஆம் ஆண்டின் பின்னர் இது நட்டமீட்டுகின்ற நிறுவனமாக மாறிவிட்டது.

2001 ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சியில் இருந்த போது எமது உறுப்பினர் கருஜெயசூரிய மின்சாரத்துறை அமைச்சராக இருந்த போது நடைமுறையில் இருந்த மின்வெட்டுக்களை இல்லாது செய்தார்.

அது மாத்திரமன்றி அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தளம் மற்றும் எம்பிலிப்பிட்டிய தனியார் மின் உற்பத்தி திட்டங்களே இன்றைய நிலையிலும் குறைந்த செலவில் மின்சாரசபைக்கு மின்சாரத்தை வழங்குகின்றன.

2011 ஆம் ஆண்டின் மின்சார சபை அறிக்கையின் பிரகாரம் மின்விநியோகத்துக்கான நீர்மட்ட கொள்வனவு போதுமானதாகவே இருந்தது.

பொறியியலாளர்களும் சீனாவைச் சேர்ந்தவர்கள். இங்கு எமது நாட்டிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட வளம் என்னவெனில் அது நாய்கள் மாத்திரமே ஆகும்.

ஏதோ ஒருவகையில் இலங்கை மின்சார சபை 2010 இல் இலாபமீட்டும் நிறுவனமாக இந்தது. இவ்வாறான சபை 2011 இல் நட்டம் ஈட்டுவதற்கான காரணம் என்ன என்பது தான் எமது கேள்வியாகும் என்றார். (அ-2)

# புகையிரதப்பாதை அமைக்கும் பணியை இந்தியாவிடம் வழங்கியது எதற்கு?

வடக்கு புகையிரதப் பாதையை அமைப்பதற்கென தெற்கின் நண்பன் எனும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து பணம் அறவிடுவதற்காக உண்டியலை குலுக்கிவிட்டு அந்த பணியை இந்தியாவிடம் ஒப்படைத்தது ஏன் என்று வினவிய அனுர குமார திஸாநாயக்க எம்.பி. அந்த பணியின் நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போக்குவரத்து அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கிற்கு புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தெற்கின் நண்பன் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது. அரச ஊழியர்களிடமிருந்து ஒருநாள் சம்பளத்தை பெற்றனர். சில புகையிரத நிலையத்தின் நிர்மாணப்பணிகள் சில நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டன. உண்டியல் குலுக்கப்பட்டது. இறுதியில் அந்த புகையிரதப் பாதையின் பணிகள் இந்தியாவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் நிலைமைகளை அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும்.

அது அமைச்சர் டலஸ் அழகப் பெருமவின் வேலைத்திட்டம் என்று அமைச்சர் கூறக் கூடாது. அமைச்சரவையின் கூட்டு பொறுப்புக்கு ஏற்ப பதிலளிக்க வேண்டும் என்பதனால் பொறுப்பை விட்டு செல்ல முடியாது. அத்துடன் கொழும்பு- கண்டிக்கு சொகுசு ரயில் சேவையில் ஈடுபடுகின்றது. அது இரு தடவைகள் பயணிக்கின்றது. இதில் ரயில் பெட்டியொன்றில் பயணிக்கும் பயணியொருவருக்கு 1500 ரூபா அறவிடப்படுகின்றது. எனினும் 360 ரூபா மட்டுமே ரயில் திணைக்களத்துக்கு கிடைக்கின்றது. புதிய ரயில் பெட்டியின் பெறுமதி 250 இலட்சமாகும். எனினும் ரயில் திணைக்களத்தின் பெட்டி திருத்தப்பட்டு அந்த தனியார் நிறுவனத்துக்கு 25 இலட்சத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி ரயில் பாதைகளை பராமரிக்கும் பொறுப்பும் தனியாருக்கு வழங்குவதற்கு கலந்துரையாடப்படுவதாக அறிய முடிகின்றது என்றார். (அ-2)


## மின்சாரக்கட்டண நிலுவைகளை செலுத்துதல் சகல மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

யாழ்.குடா நாடு முழுவதும் உள்ள இலங்கை மின்சாரசபையின் பாவனையாளர்கள் (அரச மற்றும் தனியார்) தங்களது மின்சார நிலுவைகளை 23.12.2011 க்கு முன்பாக செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். செலுத்த தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவித்தலும் இன்றி மின்துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் பாவனையாளர்களுக்கு வசதியாக மின்பட்டியல் பணம் செலுத்தப்பட்ட உடன் வரவு வைப்பதற்கு வசதியாக இல.500, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள மின்சாரசபை அலுவலகத்திலும் மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி, சுன்னாகம்,நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளிலும்) அமைந்துள்ள எமது கருமபீடங்களில் பணத்தை செலுத்த முடியும்.

மின்னிணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின்பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக ரூபா 800.00 இனை மீளிணைப்பு கட்டணமாக மின்சிட்டையில் செலுத்தப்பட வேண்டும்.

யாழ். பிரதேச மின் பொறியியலாளர்
யாழ்ப்பாணம்.

(ச-5204)

# போராட்டக்காரர்களை சுட்டு வீழ்த்த சிரிய இராணுவ அதிகாரிகள் உத்தரவு



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆஷாத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின் றனர்.

நேற்றுமுன்தினம் காலையில் சிரிய இராணுவத்தினருக்கும் போராட் டக்காரர்களுக்கும் இடையே ஏற் பட்ட மோதலில் 27 பேர் வரை கொல்லப்பட்டனர் என்று லண்ட னில் உள்ள மனித உரிமைகளுக்கான சிரிய ஆய்வகம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க் நகரில் உள்ள எச்.ஆர். டபிள்யூ என்ற மனித உரிமை கண்காணிப்பகம் சிரிய இராணுவத்தைச் சேர்ந்த 60 பேரி டம் தகவல் திரட்டினர்.

அவர்கள் கூறியதாவது, போராட்டக்காரர்களை அதிகாரி கள் சுட்டுத்தள்ள உத்தரவிட்டனர். அதுமட்டுமல்லாமல் அருகில் இரு ந்து வேடிக்கை பார்ப்பவர்களையும் சுட்டுக்கொல்லுமாறு தமக்கு உத் தரவு பிறப்பித்ததாகவும் கூறினர்.

மேலும் தோட்டாவை கணக் கின்றி பயன்படுத்துங்கள் என்றும் உத்தரவிட்டதாக கூறினர். கொல் அல்லது சித்திரவதை செய் என்பது இந்த கொலை வெறித்தாக்குத லுக்கான தாரக மந்திரமாக போதிக் கப்பட்டது.

குண்டடிப்பட்டுசாகாதவர்களுக்கு மின்சார அதிர்ச்சி கொடுத்தல், குறிப் பிட்ட இடத்திற்குள் அடைத்து வைத் தல் போன்ற சித்திரவதைகளும் நடந்தன.

தங்களுக்கு எந்த அதிகாரி உத் தரவு பிறப்பித்தார் என்பதை இந்த வீரர்கள் தெரிவித்திருப்பதால் அவர் கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மனித உரிமை கண்காணிப்பகத்தின் அதிகாரி அன்னா நெய்ஸ்டாட் தெரிவித்தார்.

சிரியாவின் ஜனாதிபதி ஆஷாத் இந்த குற்றச்சாட்டை மறுத்தார். ஆனாலும் மனித உரிமைச்சட்டத் தின் படி ஒருவரின் பணியாளரால் ஏற்படும் இழப்புகளுக்கு அவரது மேலதிகாரியே காரணமாவார் என்ப தால் ஆஷாத் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கை சந்திப்பது உறுதியாகிவிட்டது. (அ-2)


# ரஷ்யாவில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கு வெளிநாட்டு சக்திகளே காரணம்- விளாடிமிர்புடின் தெரிவிப்பு

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் ஆளும் கட்சி பெரும் பான்மை பெற்றது. எனினும் கடந்த தேர்தலை விட வாக்கு சதவீதமும் ஆசன எண்ணிக்கையும் குறைந்தது. அத்துடன் தேர்தலில் முறைகேடுகள் தலைவிரித்து ஆடியதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதனால் தலைநகர் மொஸ்கோவில் பல இலட்சம் பேர் திரண்டு போராட்டம் நடத்தினர். ரஷ்ய அரசியலில் பல ஆண்டுகளுக்கு பின்னர் நடந்த இந்த கிளர்ச்சி உலகின் கவனத்தை கவர்ந்தது.

இந்நிலையில் ரஷ்ய தொலைக்காட்சியில் நேரடி உரையாடல் நிகழ்ச்சியில் புடின் நேற்று முன்தினம் பங்கேற்று பேசினார். மக்களின் கேள்விகளுக்கு விரிவாக பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, மக்கள் ஆதரவுடன் கடந்த 12 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வருகின் றோம். அரசின் கொள்கை செயற்பாடு எதிலாவது தவறு இருந்திருந்தால் இதுவரை ஏன் எதிர்ப்பு எழவில்லை. இப்போது தேர்தல் முடிந்து மீண்டும் பெரும்பான்மை பெற்ற ஒரு ஆட்சிக்கு எதிராக எப்படி திடீரென கிளர்ச்சி வந்தது? எனவே அதில் வெளிநாட்டு சதி இருப்பதாக நினைக்கிறேன். மறுதேர்தல் நடத்துவது உட்பட எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரிக்கிறேன். எனக்கு உண்மையிலேயே ரஷ்யர்களிடம் ஆதரவு இல்லை என்று தெரிந்தால் ஒருநாள் கூட பதவியில் நீடிக்கமாட்டேன். விலகத் தயாராக இருக்கிறேன் என அவர் கூறினார். (அ-2)

# சீனாவின் வளர்ச்சி கண்டு அமெரிக்கா அஞ்சவில்லை

## ஹிலாரி கிளின்டன் தெரிவிப்பு



சீனாவின் அமைதியான வளர்ச்சியைக் கண்டு அஞ்சுவதற்கு ஏதும் இல்லை என அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

ஆனால் வேகமான வளர்ச்சி கண்டு வரும் சீனா நியாயமான பொருளாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். குறிப்பாக அறிவுசார் சொத்துரிமையை சீனா மதித்து நடக்க வேண்டும் என்பதும் இது முக்கியமானது என்றும் ஹிலாரி குறிப்பிட்டார். சீனாவின் பொருளாதார வளர்ச்சியை அமெரிக்கா வரவேற்பதாகவும் சீனாவின் இணக்கமான உறவைத் தொடரவே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விரும்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும் சீனாவின் பொருளாதார வளர்ச்சி அமெரிக்காவிற்கும் நல்லதே என்றும் சீனாவுடன் கொண்ட உறவு ஒருங்கிணைந்த சாதகமான உறவு என்றாலும் அரசியல், பொருளாதாரம், சமூக உறவு போன்றவற்றில் இரண்டும் போட்டி நாடுகளே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சீனாவுக்கான விசாஅனுமதி 32 சதவீதம் அதிகரிக்கப் பட்டிருப்பதையும் ஹிலாரி கிளின்டன் சுட்டிக்காட்டினார். (அ-2)

# ஏவுகணை உற்பத்தியில் அமெரிக்கா முதலிடம்

உலக அளவில் ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் ஏவுகணை உற்பத்தியில் அமெரிக்கா முன்னிலையில் உள்ளது. இந்த துறையில் பிரபலமாக இருக்கும் இஸ்ரேலுக்கு இணையாக ஏவுகணைகளை தயாரிக் கின்றது. இதைத் தொடர்ந்து நட்பு நாடுகளுக்கு ஏவுகணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

மொத்தமாக ஆறு ஏவுகணைகளின் விலை ரூபா 2 ஆயிரம் கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் எவ்வளவுதான் நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்தாலும் இராணுவத்தின் சில இரகசிய தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ளக்கூடாது என பாராளுமன்ற எம்.பி.க்கள் சிலரும் உளவுத் துறைக்கான பாராளுமன்ற குழுவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (அ-2)

# பத்தாவது மாடியில் இருந்து தூக்கி வீசப்பட்ட குழந்தை உயிர் தப்பியது



ஜப்பானில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 10 ஆவது மாடியில் இருந்து வெளியே வீசப்பட்ட குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தது. குழந்தையை வீசிய தந்தை கைது செய்யப்பட்டார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோ வில் உள்ள அடுக்குமாடி குடியிருப் பில் 10 ஆவது மாடியில் வசிப்பவர் ஷிங்கே ஹஷிட்டோட்டோ (வயது 37). மனைவி, 4 வயதில் மகள், ஒரு வயதில் மகன் உள்ளனர். மனைவி யும் மகளும் நேற்று முன்தினம் வெளியே சென்றிருந்தனர்.

ஷிங்கோவும் ஒரு வயது குழ ந்தையும் மட்டும் வீட்டில் இருந்தனர். அப்போது குழந்தை அழுததால் எரிச்சல் அடைந்த ஷிங்கோ பல் கனிக்கு தூக்கிவந்து அதன் கழுத்தை நெரிக்க முயன்றார். அதே வேகத் தில் குழந்தையை வெளியே வீசினார்.

10 ஆவது மாடியில் இருந்து வீசப்பட்ட குழந்தை கீழே சுற்றுச் சுவரை ஒட்டியிருந்த புதரில் விழுந்தது. இலேசான சிராய்ப்பு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தது.

பின்பு அவரே பொலிசிற்கு தக வலும் தெரிவித்தார். பின்பு பொலி ஸார் அவரை கைது செய்தனர்.

அதிக வேலைப்பளு காரண மாக அவர் மன அழுத்தத்தில் இருந் ததாக கூறப்படுகின்றது. அவருக்கு மனநல பரிசோதனை நடத்த உத் தரவிடப்பட்டுள்ளது. (அ-2)

# கடாபியைக் கொன்றமை; அமெரிக்காவையே சாரும்

ரஷ்யாவில் சமீபத்தில் பாரா ளுமன்றத் தேர்தல் நடந்தது. இதில் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கட்சி க்கு பின்னடைவு ஏற்பட்டது. இது பற்றி அமெரிக்காவின் செனட் உறு ப்பினர் ஜான் மெக்கெய்ன் கருத்து தெரிவிக்கையில், புடினை கேலி செய்து பேசினார்.

இதுகுறித்து நிருபர்களிடம் புடின் பேசுகையில், லிபிய ஜனா திபதி கடாபி கொல்லப்பட்டதில் அமெ ரிக்காவின் பங்கு இருக்கிறது. அமெ ரிக்காவின் அதிரடி படையினர், எதிர் கட்சியினர் என்ற போர்வையில் இயங்கியவர்களையும் எதிர்ப்புப் படையினரையும் ஒன்றுசேர்த்து போரிட்டனர். இதில் கடாபியை எந்த விதநீதிமன்ற விசாரணையும் இன்றி கொன்றுவிட்டனர். கடாபியைகொன்ற தில் பெரும் பங்கு அமெரிக்கா வையே சாரும். கடாபி கொல்லப்பட்ட சம்பவம் கேலிக் கூத்தான செயல் என்று கூறினார். (அ-2)




# சிரியாவிலிருந்து விரைவில் வெளியேறுமாறு தன்நாட்டு மக்களை அழைக்கின்றது கனடா

சிரியாவிலிருந்து கனடாவுக்கு திரும்பிவிடுமாறு தன்னாட்டு மக்களுக்கு கனடாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் பெயார்டு அழைப்பு விடுத்துள்ளார். சிரியாவில் அண்மைக்காலமாக அதன் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் அரசு இராணுவம் அடக்கி வருவது கொடூரமாகிவிட்டது.

இந்த அடக்குமுறையால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரி ழந்து விட்டனர். கடந்த புதன்கிழமை இராணுவத்தினருக்கும் போராட்டக் காரர்களுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியா நாட்டு இராணுவத்தின் மீது கனடா கடந்த மே மாதம் கடுமை யான நிபந்தனைகளை விதித்தது. ஒக்டோபர் மாதத்தில் இவை இன்னும் கடுமையாகின. ஆனால் இராணுவத்தின் போக்கு மாறவில்லை. இதனைத் தொடர்ந்து கனடா தான் தன் மக்களை திரும்ப அழைத்துக் கொள்ள விரும்புகின்றது. அமெரிக்காவின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், சிரியாவின் படைகள் விரைவில் வீழும் என்றார். (அ-2)

# சீன அரசு நிலத்தை ஆக்கிரமித்தது; குவாங்டாங் மக்கள் ஆர்ப்பாட்டம்



(பீஜிங்)

சீனாவின் குவாங்டாங் மாகா ணத்தில் உள்ள உகான் கிராமத்தில் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வசிக்கின்றனர். இங்குள்ள பெரும் பாலான மக்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த கிராமத்தில் தொழிற்சாலை கள் அமைக்க சீன அரசு நிலத்தை ஆக்கிரமித்தது. இதை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் விசாரணைக் காக அழைத்துச் செல்லப்பட்ட வாலி பர் மர்மமான முறையில் இறந்த தால்கிராமமக்கள் ஆத்திரம் அடைந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து கிராமத்தில் பொலி ஸார் குவிக்கப்பட்டனர். எல்லை களில் சீல் வைக்கப்பட்டது. அத்தி யாவசிய பொருட்கள் மற்றும் வெளி யாட்கள் யாரும் கிராமத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அத்துடன் மீன்பிடித் தொழிலு க்கு செல்பவர்களையும் தடுத்து வருகின்றனர். இதனால் கிராமத்தில் உணவுப் பொருட்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

கிராம மக்கள் வெளியில் செல்ல முடியவில்லை. குழந்தைகள் பாட சாலைக்கு செல்ல முடியாமல் தவிக் கின்றனர் என்று கிராம மக்கள் கொந் தளித்துள்ளனர். (அ-2)

வல்லவனைக் கண்டு அஞ்சாதீர்கள். உங்களின் நீடித்து உழைக்கும் ஆற்றல் மட்டுமே அத்தனையையும் வெல்லும். - ஜாக்கி வினீசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கொதி நீரை ஊற்றினாலும் நெருப்பு அணையும்

விடுதலைப்புலிகளை தோற்கடித்த பின்பு இலங்கை அரசு தமிழர் தொடர்பில் மிகுந்த கோபமும் ஆத்திரமும் கொண்டுள்ளதை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்துள்ளது.

ஆட்சியின் மிகப்பெரும் பொறுப்பில் இருக்கக் கூடியவர்களும் சீறிச் சினந்துகொள்வதைப் பார்க்கும்போது அரசியல் நாகரிகத்தை இலங்கை கற்றுக்கொள்ள வேண்டும் என்றே கொள்ளத் தோன்றும். அந்தளவிற்கு நிலைமை உள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை மற்றும் மீள் குடியமர்வு, தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை உள்ளிட்ட பல விடயங்களை எடுத்துக்கூறுவதுகூட முடியாத அளவில் அரசும் படைத் தரப்பும் கடுப்பாக இருப்பது, தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அரசுக்கும் ஆரோக்கிய மானதன்று.

அண்டாவில் வைக்கப்பட்ட நீரை சூடாக்குவதற்காக அடுப்பு எரிக்கப்படுகிறது. அடுப்பில் வைக்கப்பட்ட விறகு பௌவியமாக எரியுமாயின் தண்ணீரில் சீரான கொதி ஏற்படும்.

மாறாக விறகு விளாசி எரிந்து அட்டகாசம் செய்து என்னை எதுவும் செய்யமுடியாது என நினைத்துக் கொள்ளுமாயின்,

அண்டாவில் இருக்கக்கூடிய தண்ணீர் கொதித்து துள்ளிப்பாய்ந்து நெருப்பில் விழுந்து கொள்ளும்.

அட! கொதிநீர் நெருப்பில் பட்டால் நெருப்பு இன்னும் பற்றி எரியும் என்று எவரும் நினைத்து விடலாகாது.

நெருப்பு தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் எரிந்ததன் காரணமாக அதனால் சூடேறிய தண்ணீர் தானே பாய்ந்து விழுந்து தன்னைக் கொதிக்கவைத்த நெருப்பின் ஆயுளை – அதன் வேகத்தை – அட்காசத்தை அடக்கிக் கொள்கிறது. எப்படி இருக்கிறது நிலைமை?

நெருப்பு எரிந்தால் கொதிப்பேறிய தண்ணீர் அந்த நெருப்பையே அடக்கிக்கொள்ளும் தத்துவம் மனித வாழ்வுக்கும் தாராளமாகப் பொருந்தும்.

எப்போதும் கொதிப்பில் இருப்பது சமநிலையன்று.

எனவே சமநிலையை ஏற்படுத்த கொதிநீரே நெருப்பை அணைத்து பின் தானும் தணிந்து கொள்கிறது.


இந்த மகாதத்துவம் இலங்கை அரசுக்கும் பொருந்தும். யாரை வாழவைக்க வேண்டும் என்று அரசு நினைத்து விளாசிக் கொள்கிறதோ அவர்களே பாடம் புகட்டும் காலம் எப்பவும் ஏற்படலாம். எனவே முதலில் பக்குவமும் நிதானமும் முக்கியமானது.

தமிழ் மக்கள் யுத்தத்தால்பட்ட அவலம், இழப்பு, கண்ணீர், கம்பலை, மனப்பதற்றம் இவற்றையெல்லாம் சர்வசாதாரணமாக அல்லது எதுவும் நடக்காததுபோல அன்றி அப்படி நடந்திருந்தாலும் அது எமக்குத் தெரியாது என்பது போல இருப்பது அபத்தமானது.

ஆக! உள்ளது இல்லதாகாது என்ற உண்மையின் அடிப்படையில் நின்று ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும். சிந்திக்கத் தவறினால் விளைவுகள் பாதகமாகவே அமையும்.

# கூட்டமைப்பை பிளவுபடுத்துவது எனது நோக்கம் அல்ல!

## பிரபா கணேசன் அறிக்கை



கிரிக்கெட்டை வைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை பிரபா கணேசன் போன்றவர்கள் பிளவுபடுத்த முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும். கூட்டமைப்பை பிளவுபடுத்துவது எனது நோக்கமல்ல என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்பிரபாகணேசன்தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் செயற்பட்டு தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் அவர்களை விட நான் உறுதியாக இருக்கின்றேன். அவர்களின் ஒற்றுமை காரணமாகவே அரசாங்கம் இன்று அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

ஆனாலும் அவர்கள் மத்தியில் இருக்கும் தேசிய பட்டியல் உறுப்பினர் சுமந்திரனின் செயற்பாடுகளையே நான் விமர்சித்து இருந்தேன். அதுவும் நான் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்தபோது எம்மைப் பார்த்து துரோகிகள் என விமர்சித்த ஒரேயொரு உறுப்பினர் சுமந்திரன் ஆவார். தென்னிலங்கை அரசியல் நிலைவரத்திற்கேற்ப நாம் எமது முடிபுகளை மேற் கொண்டிருந்தோம்.

இதை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு எவ்விதத்திலும் அருகதை கிடையாது. அதனாலேயே இன்று அரசாங்கத்துடன் கிரிக்கெட் விளையாடியதை விமர்சிக்க வேண்டியுள்ளது என்பதை ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைமையின் அனுமதியின்றியே சுமந்திரன் அரசாங்கத்துடன் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டார் என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு வினோநோதராதலிங்கம் எம்.பியின் அறிக்கையின் மூலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்துடன் கிரிக்கெட் விளையாடுவது சரியான காரியமென்பதை தெரிவித்திருப்பது நிருபணமாகின்றது.

அரசாங்கத்துடன் கிரிக்கெட் விளையாடுவது நியாயமென்றால் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளிலும் அரசாங்கத்துடன் ஏன் இணைந்து செயற்பட முடியாது? இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னிறுத்தும் அதேவேளை வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை வசதிகளை அரசாங்கத்தின் மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலின் போது அரசாங்கத்தின் மூலமாக பல அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டபொழுதும் மக்கள் அதிகமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரையே ஆதரித்தனர். ஆகவே அபிவிருத்திகளுக்காக வடக்கு மக்கள் சோரம் போபவர்கள் அல்ல என்பதை உணர்த்தியுள்ளார்கள்.

அதை சரியாக புரிந்து கொண்டு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும். இம் முறை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரவு செலவு விவாதத்தில் வடகிழக்கு மக்களின் அபிவிருத்தி சம்பந்தமாக அதிகமான அக்கறையை தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிக்காட்டி வருவதை நான் காணக் கூடியதாக இருக்கிறது.

இதையே கடந்த காலங்களில் நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். வெறும் உணர்ச்சிப் பூர்வமான வசனங்கள் மூலமாக வாக்குகளைப் பெறுவதை விட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். அதே நேரம் அரசாங்கத்தின் மூலமாக எமது மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்காக முழுமையான முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வெற்றிகாண வேண்டும் என்றுள்ளது. (ஏ)

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு ஜேர்மன் 11.5 மில்லியன் யூரோ உதவி

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஜேர்மனி அரசாங்கத்தின் 11.5 மில்லியன் யூரோ நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதோடு சிறு மற்றும் மத்திய தரத்திலான பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

நிதி திட்ட அமுலாக்கல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி முன் வைத்த யோசனைக்கு அமைய இந்நிதி உதவியை பெறுவதற்காக ஆவணங்களில் கைசாத்திட அனுமதி வழங்கப்பட்டது. (அ-2)

# குளப்பிட்டி ஒட்டுவேலை நிலையத்தில் பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருட்டு

## 2 இலட்சத்து 50 ஆயிரம் என மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் ஒட்டுவேலை(வெல்டிங்) செய்யும் நிலையத்தில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யபட்டுள்ளது. இந்தச் திருட்டு சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த நிலையத்தை பூட்டிவிட்டு அதன் உரிமையாளர் வீடு சென்றதாகவும் மறுநாள் காலை (நேற்று) வந்த பார்த்தபோது குறித்த நிலையத்தின் அறைக்கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளதாகவும்,

இதில் ஒட்டு வேலைகளுக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அதிகளவில் திருடப்பட்டுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி சுமார் 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் அறையில் பூட்டி வைக்கப் பட்டிருந்த ஒட்டு வேலைகளுக்கு பயன் படுத்தப்படும் இயந்திரத்தை ஓரிருவர் தூக்கிசெல்ல முடியாது எனவும் குறைந்தது 6 பேராவது தேவை எனவும் குறித்த நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார். (அ-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உன்னைப் பற்றியே சிந்திக்காதே



சமனிலையில் இருந்து பிறழாதவன், மனசாந்தமுடையவன், இரக்கமும் கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக்கொள்கிறான்.

தீமையைச் செய்வதால் நமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.


சித்தாந்தங்களையும் தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப் போகிறது! நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல் பணம், புகழ் என்னும் எதிர் பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டுதொட்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடம் இருந்து வெளிப்படும்.

நம்மைப்பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங்களிலே மிகப் பெரிய பாவமாகும். சுயநல எண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

# இந்தியா - ரஷ்யா இடையேயான அணுசக்தி பணிகள் திட்டமிட்டபடி தொடரும்

## பிரதமர் மன்மோகன் உறுதி



(புதுடில்லி)

**இந்தியா -ரஷ்யா இடையேயான அணுசக்தி பணிகள் திட்டமிட்டபடி தொடர்ந்து நடக்கும். அதேநேரத்தில் அணுமின் நிலையங்கள் அமைக்கப்படும் போது அங்குள்ள மக்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.**

(சென்னை)

பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்யாவுக்கு மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக மொஸ்கோ கிளம்புவ தற்கு முன் டில்லியில் அவர் அளித்த பேட்டியில் ரஷ்ய சுற்றுப் பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே ஏழு முதல் ஒன்பது ஒப்பந்தங்கள் கையெழுத் தாகும் வாய்ப்புள்ளது. இவை வர்த்தகம், இராணுவம் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட துறைகள் தொடர்பானவை. இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஏற்கனவே கையெழுத்தான அணுசக்தி தொடர்பான ஒப்பந்தங்கள் அனைத்தும் தொடர்ந்து அமுலாக்கப்படும். இந்த விடயத்தில் ரஷ்யாவுக்கு அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படும். நெருக்கடியான காலத்தில் இந்தி யாவுக்கு பெரிதும் உதவிய நாடு ரஷ்யா என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நாடு ரஷ்யா. அணு வர்த்தகம் தொடர்பான விடயத்தில் இந்தியாவுக்கு தடை விதிக்கப்பட்ட காலத்தில் கூட ரஷ்யா இந்தியாவுக்கு உதவியது. அணுமின் நிலையங்கள் அமைக்கப்படும்போது அங்குள்ள மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கூடங்குளத்தில் மக்கள் நடத்தி வரும் போராட்டம் அவர்களின் பாதுகாப்பு தொடர்பானது. அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்கு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. நாட்டில் அணுமின் நிலையங்கள் அமைக்கப்படும் போது அதை மக்களின் ஆதரவுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதே அரசின் விருப்பம் என அவர் கூறினார்.

இதேவேளை, மன்மோகன்சிங் நேற்று ஸ்ரிமெட்யோவா சர்வதேச விமான நிலையத்தில் இறங்கினார். இவருக்கு ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.எம்.வடாகின் தலைமையில் பாதுகாப்புபடை வீரர்கள் அணி வகுக்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நேற்றுக் காலையில் அங்குள்ள உயர் அதிகாரிகள் குழு பிரதமருடன் ஆலோசனை நடத்தினர்.

இந்தச் சந்திப்பிற்கு பின்னர் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக அணுசக்தி நல்லுறவு தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். குறிப்பாக இரு நாடுகளுக்கு இடையில் அணு ஒப்பந்தம் அமுலில் இருந்து வருகின்றது. இந்த விடயங்கள் மற்றும் சர்வதேச அரசியல் நிலைமை குறித்தும் இன்று விவாதிக்கப்படும்.

அத்துடன் அந்நாட்டு பிரதமர் டிமித்ரி மெத்வதேவ், ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகிய இருவரையும் சந்தித்து முக்கிய பேச்சு நடத்துவார்.

(அ-2)

# அணுமின் நிலையத்தை மூடக்கோரி போராட்ட குழுவினர் எச்சரிக்கை

(வள்ளியூர்)

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி தொடர் பேராட்டங்கள் நடந்துவரும் நிலையில் பிரதமர் மன்மோகன்சிங் ரஷ்ய நாட்டிற்கு சென்றிருப்பதை கண்டித்தும் கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக்கோரியும் 3 நாட்கள் தொடர் உண்ணாவிரதம், கடையடைப்பு மற்றும் வேலைநிறுத்த பேராட்டம் நடத்தப்போவதாக அணு உலைக்கு எதிரான போராட்டக்குழுவினர் அறிவித்திருந்தனர்.

அதன்படி அவர்களது போராட்டம் நேற்று தொடங்கியது. இதனையொட்டி கூடங்குளம் மற்றும் இடிந்த கரையில் உள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன.

அனைத்து வீதிகளிலும் கறுப்பு கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. இடிந்தகரை, கூத்தங்குளி, பெருமணல் ஆகிய பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு இன்று மீன்பிடிக்க செல்வில்லை.

இடிந்தகரையில் நடந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு பேராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் தலைமை தாங்கினார்கள்.

இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த தொடர் உண்ணாவிரதம், கடையடைப்பு மற்றும் வேலைநிறுத்த போராட்டம் நாளை வரை நடக்கிறது. கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தியும் பிரதமரின் ரஷ்ய பயணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் திருச்செந்தூர் பகுதி மீனவர்கள் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மீனவர்கள் யாரும் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

அமலிநகர் பகுதியில் 200 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் கறுப்புக் கொடி ஏற்றினர். மீனவ கிராமங்களிலும் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.

(அ-2)

பாரதச் செய்திகள்

# வன்முறையை கட்டுப்படுத்த ஜனாதிபதி பிரதீபா பட்டேல் தலையிட வேண்டும்

## கருணாநிதி வேண்டுகோள்



கேரளாவில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறையை கட்டுப்படுத்த ஜனாதிபதி பிரதீபா பட்டேல் தலையிட வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி அவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிய அவசர கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். முல்லைப்பெரியாறு பிரச்சினையில் இரு மாநிலங்களிலும் சுமுகமான மற்றும் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தித்தர பிரதமர் மன்மோகன்சிங் அளித்திருந்த உத்தரவாதத்தை மீறி கேரளாவில் குடியிருக்கும் தமிழர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். குறிப்பாக காலங்காலமாக குடியிருந்து வந்த நுற்றுக்கணக்கான தமிழர்கள் சில சமூக விரோத சக்திகளால் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

கேரள எல்லையில் குடியிருந்து வரும் தமிழர்களின் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் மீது கல்வீச்சு சம்பவங்களும் தீக்கிரையாக்கும் செயல்களும் நடப்பதாக அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. கேரளாவையே தங்களது தாய் மண்ணாக கருதி நீண்ட நெடுங்காலமாக அங்கேயே வாழ்ந்துவரும் தமிழர்கள் தமிழகத்துக்கு திரும்பச் சொல்லி நெருக்கடி கொடுத்தால் தற்கொலை செய்துகொள்வோம் என எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை சென்றுவிட்டது.

இப்பிரச்சினையில் நீங்கள் நேரடியாகவும் உடனடியாகவும் தலையிட்டு கேரளாவில் வாழும் தமிழர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என அவர் எழுதியுள்ளார். இதன் நகல்கள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் கூட்டணித் தலைவர் சோனியாவுக்கும் அனுப்பப்பட்டு உள்ளன.

(அ-2)

# அணையின் உயரத்தை 120 அடியாக குறைப்பதற்கு கேரளா தீர்மானம்



(மதுரை)

முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினை காரணமாக தமிழகம்-கேரளா இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அணையின் உயரத்தை 120 அடியாக குறைக்கவும் புதிய அணை கட்டவும் கேரள சட்ட சபையில் தீர்மானம் நிறை வேற்றியது.

இதனால் 12 ஆவது நாளாக நேற்றும் குமிளி, கம்பம் மெட்டு பகுதிகளுக்கு வாகனப்போக்குவரத்து நடைபெறவில்லை.

இதற்கிடையில் கேரளாவின் கோரிக்கையை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால் கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் உள்ள அப்பாவி தமிழர்களை கேரளாகாரர்கள் தாக்கி விரட்டி அடித்து வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழர்கள் பொலிஸில் புகார் செய்தாலும் கேரள பொலிஸ் அதனை அலட்சியம் செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் உயிரிருக்குப் பயந்து தமிழக தோட்டத்தொழிலாளர்கள் குழந்தைகளுடன் மூட்டை முடிச்சுக்களை தூக்கிக்கொண்டு பரிதாபமாக தமிழகத்திற்கு வருகிறார்கள்.

தமிழர்களை காக்கும் கேரள அரசை கண்டித்தும், தமிழர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த மத்திய -மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கம்பத்தில் நேற்று அமைதி பேரணி நடைபெற்றது.

கம்பம் நகரில் உள்ள அனைத்து பிரிவு மக்கள் சார்பாக இந்த அமைதி பேரணி நடந்தது. கம்பம் அரசு மருத்துவமனை முன்பு கேரள அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ-2)

# லோக்பால் மசோதா நிறைவேறாவிட்டால் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம்

## ஹசாரே குழுவினர் எச்சரிக்கை



லோக்பால் மசோதாவை பாராளுமன்ற நடப்பு கூட்டத் தொடரில் நிறைவேற்றவில்லை என்றால் அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து சிறை நிரப்பும் போராட்டத்தில் ஈடுபடுவோம். சோனியா, ராகுல் உள்ளிட்ட எம்.பி.க்களின் வீடுகளின் முன் போராட்டம் நடத்துவோம் என காந்தியவாதி அன்னா ஹசாரே கூறினார்.

லோக்பால் மசோதாவை பாராளுமன்றம் நடப்பு கூட்டத் தொடரில் நிறைவேற்ற வேண்டும் என காந்தியவாதி அன்னா ஹசாரேயும் அவரது குழுவினரும் வலியுறுத்தி வருகின்றனர். இல்லையெனில் எதிர் வரும் 27 ஆம் திகதி முதல் டில்லி அல்லது மும்பையில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் இருக்கப் போவதாகவும் ஹசாரே அறிவித்துள்ளார். இதற்கிடையே லோக்பால் விவகாரத்தில் கருத்தொற்றுமை ஏற்படுத்துவதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் டில்லியில் கடந்த 13 ஆம் திகதி நடந்தது. இதில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இதனால் லோக்பால் மசோதா நடப்பு கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நீட்டிக்க வேண்டும்.

ஹசாரே உயர் மட்டக் குழுவின் கூட்டம் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் டில்லியில் நடந்தது. அப்போது ஹசாரே கூறியதாவது, லோக்பால் மசோதா தொடர்பான அனைத்துக் கட்சி கூட்டம் தோல்வி அடைந்தது குறித்து பிரச்சினை இல்லை. பாராளுமன்றில் அனைத்து எம்.பி.க்களும் மசோதா தாக்கல் செய்யப்படும் போது அனைத்து அதை ஆதரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. நடப்பு கூட்டத் தொடரிலேயே மசோதா நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுள்ளது.


நடப்புக் கூட்டத் தொடரில் மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் முதல் கட்டமாக வரும் 27 ஆம் திகதி முதல் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும். அதைத் தொடர்ந்து அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து சிறை நிரப்பும் போராட்டம் மேற்கொள்ளப்படும். சோனியா, ராகுல் உள்ளிட்ட எம்.பி.க்களின் வீடுகளின் முன்னும் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

(அ-2)

# டி வில்லியர்ஸ், பௌச்சர் அபாரம்

# தென்னாபிரிக்க அணி முன்னிலை





(சென்சூரியன்)

டி வில்லியர்ஸ், பௌச்சரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 389 ஓட்டங்களை எடுத்து முன்னிலையிலுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் சென்சூரியனில் ஆரம்பமானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மத்தியூஸ் 38, சமரவீர 36, பரணவிதான 32, மஹேல ஜெயவர்த்தன 30 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பிலாண்டர் 5 விக்கெட்டுகளையும் ஸ்ரையன் 4 விக்கெட்டுகளையும் தாகீர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை இழந்து 90 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு நைற்வோச்மனாக களமிறங்கிய ஸ்ரையன் பூச்சியத்துடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஹசிம் அம்லா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சோபிக்கத் தவறினார்.

அடுத்து கலீஸ் களமிறங்க மறுமுனையில் ருடொல்ப் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த டி வில்லியர்ஸ் நிதானமாக ஆடி ஆறுதலளித்தார்.

எனினும் ஜக் கலிஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 173 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுகளை இழந்தது.

இந்தநிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக டி வில்லியர்ஸுடன் இணைந்த பிறின்ஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார்.

இதில் டி வில்லியர்ஸ் 91 பந்துகளில் அரைச்சதம் கடக்க தென்னாபிரிக்க அணி 250 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்காக 97 ஓட்டங்களை பகிர்ந்த போது பிறின்ஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மார்க் பௌச்சர் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் சிறப்பாக செயற்பட்ட ஏபிடி வில்லியர்ஸ் 135 பந்துகளில்(12 பவுண்டரிகள் உட்பட)99 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பைத் தவறவிட்டார்.

தொடர்ந்து வந்த பிலாண்டர், மோர்னே மோக்கல் தலா 4 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.எனினும் பௌச்சருடன் இணைந்த இம்ரான் தாகீர் அதிரடியாக ஆடினார்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் தென்னாபிரிக்கா அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 389 ஓட்டங்களை எடுத்தது. இதில் மார்க் பௌச்சர் 49, இம்ரான் தாகீர்24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் திசாரப் பெரேரா 3 விக்கெட்டுக்களையும், வெலகெதர 2 விக்கெட்டுக்களையும் மத்தியூஸ் , பெர்ணான்டோ, டில்சான் தலாஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டியின் 3ம் நாள் ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் தென்னாபிரிக்கா அணி முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை கைவசமுள்ள நிலையில் 209 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

# ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் மார்ச்சில்

2012ஆம் ஆண்டு ஆசியக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி திட்டமிட்டபடி மார்ச் 12 முதல் 22ஆம் திகதி வரை டாக்காவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் சபை கூட்டத்தில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அடுத்த வருடம் இந்தியாவுக் கான பாகிஸ்தான் அணியின் சுற்றுலாவை எதிர் கால கிரிக்கெட் அட்டவணையில் சேர்ப்பதற்கு வாய்ப்பில்லை எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பிரதம செயற்பாட்டு அலுவலர் சுபான் அஹமட் இது தொடர்பாக கூறுகையில்,

பாகிஸ்தானும் இந்தியாவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் தமது சுற்றுப் போட்டியை நடத்த சம்மதித்தால் ஆசிய கிண்ணப் போட்டிகளை ஒத்திவைப்பதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது. ஆனால் பல காரணங்களால் அந்த யோசனை கைவிடப் பட்டுள்ளது என்றார்.

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு தரப்பு போட்டிகளை மீள ஆரம்பிப்பதற்கான உறுதிமொழியை இம் மாநரட்டின் போது இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நம்பிக்கையுடன் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதில் பங்குபற்றியது.

ஆனால் இந்திய கிரிக்கெட் சபைத்தலைவர் என்.ஸ்ரீனிவாசன் இம் மாநாட்டில் பங்குபற்றாத நிலையில் இது தொடர்பான உறுதிமொழி எதையும் செயலாளர் ரட்னாகர் ரெட்டியினால் வழங்க முடியவில்லை எனவும் சுபான் அஹ்மட் கூறினார்.

அடுத்த வருடம் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில்முழுமையான சுற்றுப் போட்டிகள் நடைபெற மாட்டாதென நான் எண்ணுகிறேன். ஆனால் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் அவ்வணிகள் மோதும் என அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரப், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவரை சந்திப்பதற்காக டிசெம்பர் முதல் வாரத்தில் சென்னைக்கு செல்லவிருந்தார். எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் காப்பாளரான ஆசிவ் அலி சர்தாரி திடீர் சுகவீனமுற்றதால் இவ்விஜயம் ஒத்திவைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தாயின் சபதம்

டென்னிஸ் அரங்கில் இருந்து ஓய்வு பெற்ற பின், மீண்டும் களமிறங்கிய கிம் கிளைஸ்டர்ஸ் தனது திறமையை நிரூபித்து வருகிறார். இந்த ஆண்டு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சோபிக்கத்தவறிய இவர், அடுத்த ஆண்டு பட்டம் வெல்ல வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளார்.

கடந்த 1997 இல் சர்வதேச டென்னிஸ் அரங்கில் காலடிவைத்தார் பெல்ஜிய வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ். ஸ்லாம் பட்டத்துடன் ஓபன், 2005 2007 இல் பின்னர் திருமணம் ஒரு குழந்தைக்கு 2009 இல் பெற்றுக் கொண்டு மிறங்கினார்.

ஓய்விற்கு பின் 2009, 2010 இல் ஓபனில் அடுத்த பட்டம் வென்று போல 2010 இல் உலக சம்பியன் டழ் வென்றார். ஆரம்பத்தில் ஓபனின்சம்பியன் இவர், அடுத்தடுத்து களில் காயம், உள்ளிட்ட பிரச் பங்கேற்க இதனால் தரவரிசை பின்னடைவை



இரண்டு கிராண்ட் (2003 ஆஸி. யு.எஸ் ஓபன் ) விடைபெற்றார். செய்து கொண்டு தாயான இவர், ஓய்வைத் திரும்ப மீண்டும் கள

அசத்திய இவர் நடத்திய யு. எஸ் டுத்து சம்பியன் சாதித்தார். இதே டபிள்யூ. டி. ஏ சிப் தொடரில் பட் இந்த ஆண்டு அவுஸ்திரேலியா பட்டம் வென்ற நடந்த தொடர் உடற்தகுதி சினைகளால் வில்லை. டபிள்யூ.டி.ஏ. பட்டியலிலும் சந்தித்தார்.

இது குறித்து கிம் கிளைஸ்டர்ஸ் கூறுகையில், அவுஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்று இந்த ஆண்டை சிறப்பாக ஆரம்பித்த நான் காயம் காரணமாக வெற்றி நடையை தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை. காயம் காரணமாக நிறைய தொடர்களில் பங்கேற்க முடியாமல் போனது வருத்தமளிக்கிறது.

இது குறித்து அதிக கவலைப்படப் போவதில்லை. தற்போது காயத்தில் இருந்து மீண்டு முழு உடற்தகுதியுடன் உள்ளேன். அடுத்த ஆண்டு நடக்கவுள்ள தொடரில் நிச்சயம் சாதிப்பேன் என்ற நம்பிக்கையுள்ளது. இதற்காக இப்போதிருந்தே தயாராகிவருகிறேன் என்றார்.

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை...

போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவம் பொதுமக்கள் தரப்பில் உயிரிழப்பை தவிர்க்க தம்மால் முடிந்த அனைத்தையும் செய்ததாக போரின் இறுதிக்கட்ட நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு கூறியுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

**பொதுமக்கள் பலி**

இருந்த போதிலும் மிகவும் முக்கியமாக இந்த இறுதிப்போரின் போது கணிசமான அளவு பொதுமக்கள் இழப்பு ஏற்பட்டதை இந்த அறிக்கை ஒப்புக்கொண்டுள்ளது.

அப்பாவி மக்களை பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையாக அரசாங்கத்தால் விபரிக்கப் பட்டு வந்த இந்தப் போரில், கணிசமான பொது மக்கள் இழப்பு ஏற்பட்டதை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு ஆணைக்குழு ஒப்புக்கொள் வது இதுதான் முதற் தடவையாகும்.

அத்துடன் விடுதலைப்புலிகள்தான் மக் களை மனிதக் கேடயங்களாக பயன்படுத் தியுள்ளதாகவும் ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது.

அதே நேரம் இராணுவம் பொதுமக்கள் இருந்த பகுதிகள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தியதாக கூறப்படும் குறிப்பிட்ட குற்றச் சாட்டுக்கள் தொடர்பாகவும், போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த விடுதலைப்புலிகள் அதன் பிறகு காணாமல் போனதாக கூறப் படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் விசாரணை கள் நடத்தப்படவேண்டும் என்றும் ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

போர்க்குற்றம் குறித்து சர்வதேச அள வில் அழுத்தங்கள் அதிகமானதை அடுத்தே கடந்த ஆண்டு அரசு இந்த விசாரணைக் குழுவை அமைத்தது.

முன்னணி சட்ட நிபுணரான சி.ஆர்.டி. சில்வா தலைமையிலான இக்குழுவினர் நாடு முழுவதிலும் பல அமர்வுகளை நடத்தி மக்க ளிடம் நேரடியாக விபரங்களைக் கேட்டறிந் தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக் கிய தலைவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலர் இந்த ஆணைக்குழு முன்பாக சாட்சியங் களை வழங்கியிருந்தனர்.

இருந்தும் இந்த ஆணைக்குழுவின் அதிகார வரம்பு மற்றும் இதன் பயன் குறித்து எழுந்த ஐயப்பாடுகள் காரணமாக அம்னெஸ்டி இன்டர்நேஷனல், ஹியூமன் றைட்ஸ் வாட்ச் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்கள் இந்த ஆணைக்குழுவின் அமர்வில் பங்கு கொள்ள மறுத்து விட்டன.

அரசாங்கத்தின் இராணுவ யுத்திகள் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டிருந்ததாகவும், அதில் பொதுமக்களின் பாதுகாப்புக்கே முக் கியத்துவம் வழங்கப்பட்டிருந்தால், பொதுமக்கள் இழப்பை தவிர்ப்பது அல்லது குறைப்பதை அந்த யுக்திகள் மையமாகக் கொண்டிருந்ததாகவும் ஆணைக்குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்கள் இழப்பை தவிர்ப்பதற்காக இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் வேண்டு மென்றே மிகவும் தாமதப்படுத்தப் பட்டதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. எப்படியிருந்த போதிலும்சில தருணங்களில் பலப்பிரயோகம் அளவுக்கதிகமாக இருந்ததாக [illegible] என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது.

**அளவுக்கதிகமான தாக்குதல் :**

அதாவது விடுதலைப்புலிகள் பொது மக்கள் மத்தியில் இருந்து தாக்குதல் நடத்திய காரணத்தால், அதற்கான இராணுவத்தின் பதில் தாக்குதல்கள் சில வேளைகளில் அள வுக்கு அதிகமாக இருந்திருக்கலாம் அவை குறித்து விசாரிக்கப்பட வேண்டும். அந்தத் தாக்குதல்கள் தேவைக்கு அளவானதாக இருந் ததா என்பது குறித்து ஆராயப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் இராணுவத்தின் பொது வான நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக, குற்றங் காணப்படும் இரா ணுவச் சிப்பாய்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். அதே வேளை பாதிக் கப் பட்டவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு உரிய நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்

**மருத்துவமனை மீதான தாக்குதல் :**

போர் வேளையில் மருத்துவமனைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்ட தாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய விவகாரம் குறித்து தனது கருத்தைக் கூறியுள்ள நல்லி ணக்க ஆணைக்குழு, மருத்துவ மனைகள் மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப் பட்டிருக்கின்ற போதிலும், அந்தத் தாக்கு தலை யார் நடத்தினார்கள் என்று முடிபுக்கு வருவது கடினம் என்று கூறியுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பு உறுப்பினர் ஒருவரின் சாட்சியின்படி, விடுதலைப் புலிகள் புதுமாத்தளன் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்திவிட்டு அதற்கான மன்னிப்பு கோரிய தாகவும் ஆணைக்குழு ஒரு சம்ப வத்தை சுட்டிக் காட்டியுள்ளது.

**போர்ச் சட்டங்களில் மாற்றம் தேவை**

சர்வதேச போர்ச் சட்டங்கள் குறித்து தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள நல் லிணக்க ஆணைக்குழு தற்போதைய சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், அரசாங்கங்களுக்கும் அரசாங்கம் அல்லாத போராட்டக் குழுக் களுக்கும் இடையிலான போர்களுக்கு உகந்த வகையில் மறு சீரமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. அரசாங்கம் அல்லாத குழுக்கள் எந்த விதமான விதிகளையும் பின்பற்றாத காரணத்தால், அதற்கேற்றவாறு சர்வதேச சட்டங்களை மாற்றுவது தொடர்பில் சர்வதேச சமூகம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

**மருந்துப் பற்றாக்குறை**

பொதுமக்கள் தஞ்சமடைவதற்காக அறி விக்கப்பட்ட தாக்குதல் சூனியப் பிரதேசங் களில் போதுமான மருந்து மற்றும் உணவுப் பொருட்களின் விநியோகம் இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து கருத்துக் கூறியுள்ள ஆணைக்குழு, அரசாங்கம் போதுமான விநியோகத்தை அங்கு அனுப்பிய போதிலும், அவற்றில் ஒரு பகுதியை விடுதலைப் புலிகள் பறித்துக் கொண்டு விட்டதாக கூறியுள்ளது. இருந்த போதிலும், அங்கு மருந்துப் பொருட் களின் விநியோகம் போதுமானதாக இல்லை என்று அது ஒப்புக் கொண்டுள்ளது.

**காணாமல் போனவர்களுக்கு சிறப்பு ஆணைக்குழு**

அரசாங்கப் படைகள் நல்ல முன்னு தாரண அடிப்படையில் செயற்பட்ட போதிலும், அங்கு பெருமளவிலான காணாமல்போதல்கள், கடத்தப்படுதல் மற்றும் சட்ட விரோத தடுப்பு வைப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இவை குறித்து விசாரிக்க காணாமல் போனவர்களுக்கான ஒரு சிறப்பு ஆணைக்குழு அமைக்கப்பட்டு சூத் திரதாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரங்கள் தொடர்பில் சாட்சிய மளித்த சிலர் ஈ.பி.டி.பி, கருணா குழு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய அமைப் புக்கள் மீது ஆட்கள் கடத்தப்பட்டமை குறித்து புகார் செய்தனர். ஆனால், அந்த அமைப்புக்கள் அவற்றை மறுத்துள்ளன. சட்டவிரோத ஆயுதக் குழுக்கள்குறித்த மேலதிக விசாரணைகள்தேவை.

காணாமல் போனவர்களை கண்டுபிடிப் பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களில் குற்றஞ் சுமத் தப்படாமல், பலவருடங்களாக தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்களின் விவகாரங்களை ஆராய சுயாதீன ஆலோசனைக்குழு ஒன்று நியமிக் கப்பட வேண்டும்.

பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட இலங்கையின் கொலைக் களம் விவரணப் படத்தின் நம்பகத் தன்மை குறித்து ஆணைக்குழு கேள்வி எழுப்பியுள்ளது.

**இராணுவ தலையீடு**

வட மாகாணத்தில் சிவில் நிர்வாக நடவடிக் கைகளில் இராணுவம் தலையீடு செய்வதாக அடிக்கடி வரும் குற்றச்சாட்டு குறித்து கருத்துக் கூறியுள்ள ஆணைக்குழு, சிவில் நடவடிக் கைகளில் இராணுவத் தலையீடு இல்லாது செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத் துள்ளது.

**அதிகாரப்பகிர்வு தேவை**

தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் தற்போதைய வன்செயல்கள், சந்தேகங்கள், தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதான உணர்வு ஆகியவற்றை நீக்க, மக்களை மையமாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு முறைமை ஒன்று கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் உள்ளூராட்சி சபைகள் பலப்படுத்தப்படுவதுடன் தற்போதைய மாகாணசபை முறை திருத்தப்பட்டு, மத்தியில் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்றும் நல் லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

வெளியுலகிற்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படுதலில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது. (எ-5)

## சம்பந்த...

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எடுத்துச் சென்றதாக தெரியவந்தது.

இதனால் விசனமடைந்த சம்பந்தன் எம்.பி. நாடாளுமன்ற அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தார். அதன்பின் நாடாளுமன்றத்திற்கு சமு கமளிக்காத ஆளுங்கட்சி உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்படவிருந்த பிரதிகள் இரா.சம்பந்தனுக்கு வழங்கப்பட்டன. (எ-5)

## லண்டனி...

மேற்கொண்டு வருவதாகவும் விமான நிலை யத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கைக்கு நாடு கடத் தப்படும் தமிழர்கள் இலங்கையில் வைத்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## இராணுவத்தைக் காப்...

வாய்ந்ததாக இருக்கவேண்டும். ஆனால் இல்லாமல் உள்ளார்ந்த விசாரணைக்குழு ஊடாக இருக்க வேண்டும் என்ற பாணியிலும் இந்தக் கருத்து கூறப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கு தீர்வென்பது தொடர் பாக இது வெறுமனே உள்ளூரராட்சி சபை களை தரம் உயர்த்துவது தொடர்பாகவோ அல் லது 13ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்தல் ஊடாகவோ நிச்சயமாக இதனைச் செய்ய முடியாது.

இது ஒட்டுமொத்தமாக சரியான நடை முறைகிடையாது. என்ன காரணத்திற்காக யுத்தம் தோன்றியது என்ன காரணத்திற்காக யுத்தம் முடிவடைந்தது என்பது தொடர்பாக எந்த விடயமும் கண்டறியாமல் இவர்கள் எடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முழுமையான விடயங் கள் கண்டறியப்பட்டால் மாத்திரமே நிவாரணம் கிடைக்குமே தவிர இதற்காக அரசினால் முழு மையான தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது என்றார். (எ-1)

## யுத்தத்தில் பாதிக்...

அமைப்புக்களும் கூடுதல் ஆர்வம் காட்ட வேண்டும்.

யுத்தத்தினால் ஏற்பட்ட காயங் களை ஆற்றுப்படுத்துவது மிகவும் அவசியமானது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இழப்புக் களை எதிர்நோக்கியவர்களுக்கு விசேட தேசிய நிகழ்வு ஒன்று வருடாந் தம் நடத்தப்பட வேண்டும்.

அரசியல் ரீதியான இணக்கப் பாடு இன்மையே நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பிரதான தடையாக அமைந்துள்ளது.

இன முரண்பாட்டுக்கு சிங்கள தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்பு சொல்ல வேண்டும். தெற்கின் பிரதான இரண்டு கட்சிகளும் கூட்டாக இணை ந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் தீர்வுத் திட்டத்தை தமிழ்த் தலைவர் களுக்கு வழங்கியிருந்தால் பாரி யளவு உயிர்ச் சேதங்களை தவிர்த் திருக்க முடியும்.

இதே போன்று தமிழ்த் தலைவர் கள் ஆயுத போராட்டத்திற்கும் பிரி வினைவாதத்திற்கும் கூடுதல் ஆதரவு வழங்கியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு எதிராக தைரியமாக தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுத்திருக்க வேண்டும் என தெரி விக்கப்பட்டுள்ளது. (எ-5)

## புலிகள் மீதான...

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தாக்கல் செய்த மனு ஏற்றுக்கொள் ளப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விரைந்து விசார ணைக்கு எடுத்துக்கொள்ளக் கோரி நேற்று சென்னை உயர் நீதிமன்றத் தில் வைகோ நேரில் சமுகமளித்து வாதாடினார்.

இதன்போது விடுதலைப்புலி கள் மீதான தடை உத்தரவை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய அரசு நீடித்துக்கொண்டே வரும் நிலையிலேயே வைகோ இக்கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

இந்நிலையில் இம் மனு மீது விரைவில் விசாரணை நடத்துமாறு கேட்டுக்கொள்வதாக நீதிமன்றத்தில் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து தமிழீழ விடு தலைப்புலிகளுக்கு எதிரான தடை யை நீக்கவேண்டும் எனக் கோரும் மனுமீதான விசாரணை அடுத்த மாதம் இடம்பெறும் என சென்னை உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது. (எ-5)


விடுதலைப் பெருவிழா

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும்
என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்
(மத்தேயு 11:28)

Free
பாவத்திலிருந்து!!! சாபத்திலிருந்து!!! தீராத நோயிலிருந்து!!!
பில்லி – சூனியக்கட்டிலிருந்து!!! பிசாசின் பிடியிலிருந்து!!!
அடிமைத்தனத்திலிருந்து!!!
Free

இயேசு விடுதலை கொடுக்கிறார்...
17 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு ஒளிவிழா நிகழ்வும் நடைபெறும்.
இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.
காலம்: 17, 18 மார்கழி 2011
நேரம்: மாலை 4.00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,பிரவேசம் இலவசம்.

கடந்த நாட்களில் கிடைக்கப் பெற்ற அற்புதங்களில் சில


அன்ரன் மேரி சுலோஜினி(குருநகர்)
நான்கு வருடங்களாக (15-19) வயதுகளில் பிசாசின் பிடியில் சுய நினைவின்றி வாழ்ந்து வந்த எனக்கு திருச்சபை ஆராதனையில் பங்குபற்றி ஜெபித்த போது பரிபூரண சுகத்தைப் பெற்று சந்தோஷமாக வாழ இயேசு விடுதலை தந்தார்.


யசீலா அருமைத்துரை (அரசடி,நல்லூர்)
சிறுநீரகம் மற்றும் கால் நரம்புகள் செயலிழந்த நிலையில் நடக்க முடியாமல் இருந்தபோது ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகத்தை இயேசு கொடுத்தார்.


அருள்நாயகம் சுரேஸ்
(4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்)
இரண்டு கண்களிலும் 7 வயதிலிருந்து பார்வை குன்றி காணப்பட்டது. 5 தடவைகள் சத்திர சிகிச்சை மூலம் முயற்சித்தும் கிடைக்கப்பெறாத பார்வையை ஜெபத்தின் ஊடாக ஆலோசனை பெற்று மீண்டும் பார்வைபெற இயேசு உதவிசெய்தார்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
இல.673 பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொலைபேசி: 021 222 6730


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.